

# ரமணோதயம்

ஜனவரி 2025

காலாண்டு

ஜயந்தி இதழ்

விலை ₹ 20




145 ஆவது ஜயந்தி விழா – ஸ்ரீ ரமண மகரிஷிகளின்
திருவுருவப் படம் சென்னை, மயிலாப்பூர் மாடவீதிகளில் ஊர்வலம்



கார்த்திகை மகா தீபம் – ஸ்ரீ ரமணாலயம், குரோம்பேட்டை



ரமண ஜயந்தி விழா – அம்பாசமுத்திரம் மற்றும் திருச்சுழி

உதயம் 24 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2025

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

*ஜயந்தி இதழ், ஜனவரி 2025*


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ரமண புராணம் | ஆகுரா | 15 |
| 3 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 25 |
| 4 | மேனியைக் கொல்வாய் | D. தியாகராஜன் | 33 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | | 43 |
| 6 | தட்சிணாமூர்த்தி தோத்திரம் | சிதம்பர குற்றாலம் | 45 |
| 7 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 47 |
| 8 | டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு-1 | மா. முருகேசன் | 51 |
| 9 | திரும்பிய கந்தன் | தீபா மகேஷ் | 61 |
| 10 | ஆதிசங்கரரின் பக்தி வேதாந்தம் | டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன் | 65 |
| 11 | செய்திகள் | | 76 |

# ஆசிரியர் உரை

## அன்பே சிவமாய் அமர்ந்தபிரான்

ஒரு சாதகனின் தேவை எது? இறைவன் மாட்டும் அடியார் பாலும் கொண்ட அன்பா? அன்றி அனைத்தையும் ஆராயும் அறிவா? இதற்கு விடையை திருமந்திரம் 270 ஆவது பாடலில் திருமூலர் கூறுகிறார்.

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்துஇருந் தாரே.

திருமூலர் வாக்கின்படி, அறிவற்றவர்களே அன்பாகிய சக்தியும் ஞானமாகிய சிவமும் ஒன்றல்ல, இரண்டு என்று கூறுவார்கள். அன்பு முற்றிலும் பரிணமிக்கும்போது சிவமாகிய ஞானம் எழுந்து ஒளிரும். ஒளிரும் என்பது சாதனையில் முழுமை அடையாதவர் உணர்வதில்லை. முழுமை அடைந்த கனிந்த அன்புதான் சிவமாகிய ஞானத்தை உணர்ந்தபின்னர் அன்பே வடிவாய் சிவமாகிய இறுதி நிலையை அடைவர் என்பதாம்.

மீண்டும் திருமந்திரத்தின் 416 ஆவது பாடலில் சிவனே அனைத்திலும் அடிப்படையாய், முற்றிலும் பரிணாமம் அடைந்த நிலையில் அன்பும், அறிவும் ஒன்றாய் ஒளிரும் இறுதி நிலையைக் கூறுகிறார்.

அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்திலும் அமர்ந்துநின் றானே.

உயிர், சாதனையில் பரிணாமம் அடையும்போது இறைவனே இன்பமும் அறிவும் ஒன்றாய் இணைவதற்குக் காரணமாய் உள்ளவன். அவனே கால எல்லையை வகுத்தவனாயும் அனைத்தையும் எல்லை கடந்த தன்னில் ஒன்றச் செய்பவனாகவும் திகழ்கிறான். அவனே தனது ஐம்பெரும் தொழில்களில் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல் மற்றும் அருளல் ஆக அனைத்திற்கும் ஆதி காரணமாய் அமைகிறான்.

வேதாந்த நூல்களைப் படிக்கும்போது, அறிவு கூர்மைபெற்று, மதி நுட்பமாகிறது உண்மைதான். ஆயினும், இறைமீதும் மனித குலத்தின்மீதும் அன்பை விளக்கும் பாராயண மற்றும் இறைக் காதல் நூல்களை வாசிக்கும்போதும், மனம் மிகவும் மென்மையாகி உள்ளம் கரைந்து உருகி பரம்பொருளில் ஒன்றாகிறது.

பகவானின் வாழ்க்கை நிகழ்வுகளைக் கண்ணுறும்போது இறைவன்மீது கொண்ட பேரன்பினால் அவனையே சத்குரு வடிவில் வழிபடும் பாகவத ஸ்லோகம் இதை விளக்குகிறது.

“தவகதாமிருதம் தப்தஜீவனம்
கவிபிரீடிதம் கர்மசாபம்
ஸ்ரவண மங்களம்
ஶ்ரீமதாததம் புவிக்ருணந்திதே
பூரிதா ஜனாக்ஹ” (10:31:9)

சத்குருவாய் தோன்றும் இறைவனே! அமிர்தமயமான உனது வாக்கும், உனது செயலாற்றுதலின் விளக்குமும்தான் இந்த உலகில் துன்பம் அனுபவிக்கும் மக்களின் உயிராகவும் ஆன்மாவாகவும் இருக்கிறது. கற்றறிந்த முனிவர்களால் வருணிக்கப்பட்டது அவர் அளிக்கும் விளக்கங்கள், கர்ம வினையின் செயல்பாடுகளை எல்லாம் அடியோடு நசிக்கச் செய்வது. அவற்றைச் செவிமடுக்கும் அனைவருக்கும் ஆன்ம சாட்சாத்காரத்தை அளிக்கிறது. சத்குருவின்

உபதேசத்தை உலகில் பரப்பும் அனைவரும் மகத்தானவர்கள்” என்கிறார் வியாசர்.

பாகவத புராணத்தில் வியாசர் கூறுவதை ஒத்தது காவ்ய கண்ட கணபதி முனி பகவானைப் போற்றுவது. “கதயா நிஜயா கலுஷம் ஹரதா” என்று துதிக்கிறார். பகவானின் வாழ்க்கை சரிதத்தைக் கேட்பவரின் பேரேட்டில் பாவங்கள் அனைத்தும் அகற்றப்படுகின்றன. இறைவனின் சிருஷ்டிகள் அனைத்தின்மீதும் பகவான் காட்டும் பரிவும், பாசமும் அளவற்றது. இந்நிகழ்வுகளை படிக்கும்போது எல்லாம் நமது உள்ளம் கரைந்து அவன் திருவடிகளிலேயே ஒன்றுகிறது.

திருவாசகத்தின் ‘கோயில் திருப்பதிக’த்தில் மணிவாசகர் சிறப்புற மொழிகிறார்.

“இன்றெனக்கு அருளி இருள்கடிந்துஉள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்புஅற நினைந்தேன்
நீஅலால் பிறிது மற்றுஇன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்றும் நீஅல்லை அன்றிஒன்று இல்லை
யார்உன்னை அறியகிற்பாரே.”

(கோயில் திருப்பதிகம் 227)

ஆழ்ந்த பொருள் கொண்ட இந்தத் திருவாசகப் பாடலைக் காண்போம்:

இன்று எனது ஆன்ம இதயத்தில் சத்குருவாய்த் தோன்றி அஞ்ஞான இருளை அழிக்கும் ஞானசூரியன் ஆகி என் உள்ளே சாஸ்வதமாய் ஒளிர்கின்றாய். இந்த பரபோதமான சிவபோதம் உள்ளத்தே ஓங்கும்போது ஜீவபோதம் அழிகின்றது. மாயையின் வெளிப்பாடாகிய காலதேச வர்த்தமானங்களாய் நீ வெளிப்படுவதில்லை. நீ அனைத்திற்கும் ஆதாரமாய் இருப்பதால்தான் அவை

அனைத்தும் தோன்றுகின்றன. வேறு எந்த எண்ணமும் இல்லாமல் உன்னைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை. நீதான் அனைத்துமாய் பரிணமித்துள்ளாய் என்ற பேருண்மையை உணர்ந்து அணுஅணுவாய்த் தேய்ந்து உன்னுடன் ஒன்றுகிறேன். நான், என் சாதனையின் இறுதியில் ஒன்றிவிடும் உன்னையன்றி வேறு எதுவுமே இல்லை. சத்குருவின் வழிகாட்டுதலின்படி தீவிர சாதனையில் ஈடுபட்டு பரிணமிக்கும் ஞானியைத் தவிர வேறு யாருக்கும் இந்த உண்மை புலப்படுவதில்லை

டாக்டர் K. சுவாமிநாதன் கூறுகிறார்: "பகவானின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளை படிக்கும்போது நம் உள்ளம், மணிவாசகர் கூறுவதுபோல், சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் நிலை இது.

இந்த நிகழ்வுகள் நம் உள்ளத்தைத் தொடுவதால் நம் தன் முனைப்பு கரைந்து, கரைந்து அவனுடன் ஒன்றாகிறோம்.

கடவுளுக்கும் குருவுக்கும் இதயத்திற்கும் வேறு பாடில்லை எனப் பகவான் மொழிந்துள்ளார். குருவானவர் மனித உருவில் நம்முன் குறிப்பிட்ட காலத்தில் தோன்றுகிறார். அதனால் அவரோடு நாம் தொடர்பு கொள்ள முடிகிறது. குருகிய காலத்திலேயே குருவானவர், நம் உள்ளத்தில் இருக்கிறார் என்பதையும் வெளியில் அல்ல என்பதையும் நாம் உணர்கிறோம். இறுதியில் சத்குரு கடவுள்தான். அவர் கடவுள் மற்றும் உள்ளத்தில் இருந்து வேறானவர் அல்ல என்பதை உணர்கிறோம். இவை எல்லாவற்றையும் ஒருவர் கடந்து செல்ல வேண்டிய படிகள். எப்போதும் நம் உள்ளத்தில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டியது இதுதான்."

அவன் பேரருட் கருணையில்தான் நாம் அவனை நினைத்து வணங்கித் தொழ முடிகிறது என்பதுதான் தத்துவ அறிவர் டாக்டர் சுவாமிநாதன் தரும் விளக்கம்.

*தாய் தனது குழந்தைகளிடம் காட்டும் பரிவைவிட குரு நம்மீது வைக்கும் பரிவும், அக்கறையும் மிகப் பெரியது. நாம் குருவை ஏற்றுக் கொண்ட ஆரம்ப காலத்திலேயே இதை நாம் உணரலாம். அவரையே நமது முழு பற்றுக் கோடாய் ஏற்றுக் கொண்டு அவர்தம் பேரருளால் நம்மை வழி நடத்துவார் என்று முழுதும் நம்பி இருந்தால் அவர் நம்மை உய்வடையும் நேர் வழியில் நடத்துவார்.*

*உங்களுக்கு, குரு பலர் இருப்பதாகக் கூறினால் நீங்கள் ஒருவர் மீதுகூட முழு நம்பிக்கை கொள்ளவில்லை என்பது பொருளாகும். இறுதியில் நம்மை நாமே உணர்கின்றபோது எல்லா குருவும் ஒன்றே என்பதை அறிகிறோம் என்கிறார் கே. சுவாமிநாதன்.*

*பகவான் திருவாக்கிலேயே இதை அறியலாம்.*

*இத்தனை குருக்களில் எவர் மெய்யான சத்குரு என்ற வினாவிற்கு பகவான் விடை இறுக்கிறார்.*

*“எவர் உங்களை தனக்கான ஒன்றினைச் செய்ய வேண்டும் எனக் கேட்க மாட்டாரோ, எவர் நீங்கள் விரும்புவதைச் செய்வதற்கு முழு உரிமையும் கொடுக்கிறாரோ அவரே உண்மையான குரு என்கிறார் பகவான். அதாவது எவர் சீடனைத் தன் முழு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கவில்லையோ, எவர் காலம் முழுதும் நீங்கள் அவரைத் சார்ந்தே இருக்க வேண்டும் என்று உங்களை நினைக்கச் செய்வதில்லையோ அவரே உண்மையான குரு” என்று விளக்குகிறார் பகவான். பக்குவம் ஆக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்காமலேயே, இதைச் செய், அதைச் செய் என்று உங்களிடம் கூறாமலேயே நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே உங்களை ஏற்றுக் கொண்டு நீங்கள் உணராமலேயே உங்களை பக்குவமாக்குபவரே சத்குரு. நம் பகவான் அத்தகைய சத்குரு.*

*பகவானாகிய சத்குரு நாம் அறியாமலேயே நம் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துகிறார். நீண்ட நாள் பக்தர் ஒருவர் பகவானிடம், "பகவானே! நான் பல ஆண்டுகளாக உங்களையே பற்றுக் கோடாய் கொண்டு உங்களிடமே முற்றும் சரணடைந்து உள்ளேன். எனக்கு ஆன்மிக முன்னேற்றம் நிகழ்ந்ததாகத் தெரியவில்லையே" என்று குறைபட்டுக் கொண்டார்.*

*பகவான், "உனக்கு ஆன்மிக முன்னேற்றம் ஏற்படவில்லை என்று எப்படித் தெரியும்? உண்மையில் பார்க்கப் போனால் இன்னும் ஆன்மிக முன்னேற்றம் வரவில்லையே என்ற ஏக்கமே, உங்களுக்குள் ஆன்மிக முன்னேற்றம் நிகழ்ந்துள்ளதை உறுதிப்படுத்துகிறது" என்றார்.*

*'தன்னை உணர்தல்' என்பது வெளியில் இருந்து வருவதில்லை எனப் பகவான் இயம்புகிறார். அந்த நிலையை நாம் தேட முடியாது. அவன் கருணையால்தான் அந்நிலை வந்து சேரும். சத்குருவின் அற்புத சக்தியை நாம் கற்பனைகூட செய்ய முடியாது. உங்களுக்கு எது சிறந்தது என்று அவனுக்குத் தெரியும். அவனுக்குக் கட்டளை இட வேண்டாம். செயல்பாட்டினை விரைவு படுத்தும்படி கேட்க வேண்டும். யோக சாதனை உங்களால் இயலும்போது முழு ஈடுபாட்டுடன் செய்யுங்கள். இறுதி முடிவை அவனிடம் விட்டு விடுங்கள். இதுவே ஆத்ம சமர்ப்பணம் என்கிறார் கே. சுவாமிநாதன்.*

*விஸ்வநாத ஸ்வாமி எழுதிய பகவானின் அஷ்டோத்திரத்தில் 'ரிஜுமார்க ப்ரதர்ஷகாய' என்னும் சொற்றொடர் வருகிறது. 'ரிஜுமார்க ப்ரதர்ஷகாய' எனும் துதியின் பொருள் 'நேர்வழி' அல்லது மெய்யான வழி என்பதாகும். நமது மகிழ்ச்சியின்மை என்ற பிரச்சினையை தீர்க்க நேர்வழியைக் காண்பிப்பவர் என்பது இதன் பொருள்.*

நாம் அனைவரும் ஆழ்ந்த தூக்கத்தில் காணும்போது விழிப்பு நிலையில் நாம் கண்ணுறும் வேறுபாடுகள் அனைத்தும் மறைய, வேறுபாடற்ற நிலையில் ‘மனம்’ ‘உள்ளம்’ ஆகிறது. அந்த வேறுபாடற்ற நிலையை விழிப்பு நிலையிலும் அனுபவிப்பதுதான் ஆத்ம சாட்சாத்காரம். தன் முனைப்பு அற்ற நிலையில் மனம் சதா காலமும் ஏதேனும் ஒன்றைத் தேடிக் கொண்டே இருக்கிறது. ஏதேனும் விஷய வாசனையைப் பற்றிக் கொண்டு நம் அடிப்படை நிலையான ‘தான்’ அற்ற நிலையில் இருந்து வெளியேறி விஷய உலகில் அகந்தை என்னும் தளையில் இருந்து விடுபடுவதே முக்தி. பகவத் கீதை 2.56 இல் கண்ணன் கூறுகிறான்.

துःகேஷ்வநுத்விக்நமநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:।
வீதராககபயக்ரோத: ஸ்திததீர்முநிருச்யதே ॥2.56॥

ஒரு ஞானியானவன் பற்று, பயம், க்ரோதம் ஆகியவற்றில் இருந்து விடுபட்டவன். அவன் துக்கத்தாலேயோ, சுகத்தாலேயோ பாதிக்கப்படாதவன். அவனுக்கு உலகில் தேவையான பொருள் எதுவுமே இல்லை. எதையுமே அவன் தேடிச் செல்வதில்லை. சாதாரண மனிதனின் மனம் சதா எதையாவது தேடிக் கொண்டே இருக்கும். ஞானி எதையுமே தேட வேண்டிய தேவை இல்லை. அவன் ஒரு ‘ஸ்திதப் ப்ரக்ஞன்’ அவனே சுயம்பு. திருமந்திரத்தில் திருமூலர் கூறுவதுபோல் அவன்

“அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகிஅமரும் அறம்பொருள்
அன்பினுள் ளாருக்கே அணைதுணை யாமே.”

திருமந்திரம் 279

பொருள்: இறைவனாம் சத்குரு தன்னை அறியும் அறிவு கொண்டவரிடம் அவர்தம் அன்பில் நிலைபெற்று, அருள் தருபவன். சத்குருவானவன் தன் இதயத்தில் நிலைபெற்று நிற்பதைப் போல் மற்றவரிடம் நிற்பவனும்

அவனே ஆவான். அவன் அன்பே உடலாய் உள்ளவன். உலகத் தோற்றத்திற்கு முன்னும் அதன் ஒடுக்கத்திற்குப் பின்னும் அழியாது நிற்பவன். அவன் ஆத்ம விசாரம் செய்யும் முனிவர் அனைவர்க்கும் தலைவன்.

அவனிடம் எவர் அளப்பரிய அன்பு கொள்கிறாரோ, அவரிடம் நிலைத்து நிற்கும் அழியாப் பொருள் அவன். அவனிடம் அழியாத அன்போடு சரண் புகுவோர்க்கு அந்த சத்குரு என்றும் துணையாகி, உய்வை எய்தும்படி செய்கிறான்.

பகவானின் இந்தப் பேரன்பு அண்டம் முழுவதையும் உள்ளடக்கியது. பறவைக் குஞ்சு முதல் நாய்க் குட்டிவரை அவரது ஆத்ம விகாஸத்தில் அடக்கம். குஞ்சு சுவாமி கூறும் ஒரு சுவாரசியமான நிகழ்ச்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

வழக்கமாக இரவு நேரங்களில் சோஃபாவில் அமர்ந்து, மௌனமாக அதிகாலை வரை அங்கேயே இருந்து வந்த பகவான், ஒரு சமயம் காலை மூன்று மணி அளவில் எழுந்து வெளியே செல்வதைக் கண்ணுற்றார் குஞ்சு சுவாமிகள். வழக்கமாக அமைதியாக அமர்ந்திருக்கிறார். இப்போதெல்லாம் எங்கோ அதிகாலை இருளில் செல்கிறார் என்று அறியும் ஆவல் குஞ்சு சுவாமியை பற்றிக் கொண்டது. பகவான் அறியாதவாறு (அங்ஙனம் அவர் நினைத்துக் கொண்டு இருந்தார்.) அவரைப் பின் தொடர்ந்தார். பகவான் வெளியே சென்று கற்களை வைத்து, அதன்மேல் ஒரு உலோகப் பாத்திரத்தை வைத்து, அதில் நீரை ஊற்றினார். அதன்பின் அடுப்பினை எரியூட்டி கொதிக்கும் நீரில் ஏதோ ஓர் வெள்ளைக் பொடியைக் கொட்டி கொதிக்கச் செய்தார்.

இதைக் கண்ட குஞ்சு சுவாமிக்கு, ஒருவேளை பகவான் சித்தர் வழியில் ஏதோ காயகல்பம் தயாரிக்கப் போகிறார் போலும் என்ற பேராவல் பற்றிக் கொண்டது. என்ன செய்கிறார் என்று பார்த்து விடுவோம் என்று

மறைவில் இருந்து எண்ணினார் குஞ்சு சுவாமி. பகவான் அருகில் ஒரு மூங்கில் கூடை மூடப்பட்டு இருந்தது. ஒரு உலோகத் தட்டும் இருந்தது. அந்தத் திரவம் கொதித்து முடிந்தவுடன், பகவான் அதைத் தட்டில் ஊற்றினார். உடனே, "குஞ்சு இங்கே வா!" என்று அழைத்தார். பகவானுக்குத் தெரியாமல் இங்கே பதுங்கி உள்ளோம் என எண்ணியிருந்த சுவாமி அதிர்ச்சி உற்றார். சர்வ வியாபியான பகவான் அறியாமல் ஏதேனும் நடக்குமா? வெளிய வந்த குஞ்சு சுவாமியிடம், "நான் இந்தக் கூடையைத் திறக்கிறேன்?" என்று கூறி வெளியே வருவதைப் பிடித்துக் கொள்ளச் சொன்னார். பகவான் கூடையைத் திறந்ததும் வெளியே நான்கு நாய்க் குட்டிகள் ஓடி வந்தன. அவை வேகமாய் கஞ்சித் தட்டை நோக்கி ஓடுவதைக் கண்ட பகவான் குஞ்சு சுவாமியிடம் "நாலையும் பிடி" என்றார். சூடான கஞ்சியை நோக்கி வேகமாய் ஓடி வரும் நான்கு நாய்க் குட்டிகளையும் குஞ்சு சுவாமி பிடித்தார். பின்னர் பகவான், "ஒவ்வொன்றாய் விடு" என்றார். குஞ்சு சுவாமி மெதுவாக ஒன்றன்பின் ஒன்றாக நாய்க் குட்டிகளையும் மெதுவாக தட்டை நோக்கி செலுத்தியவுடன், அவை ஒவ்வொன்றாக கஞ்சி கலயத்தைக் கவிழ்க்காமல் மெதுவாகச் சாப்பிட்டு முடித்தன.

பகவான் குஞ்சு சுவாமியிடம், "இந்த நாய்க் குட்டிகளை விட்டு விட்டு அம்மா நாய் ஓடி விட்டது. பாவம்? இவற்றை பராமரிப்பவர் யார்? எனவே நான் தினமும் அதிகாலை எழுந்து இவற்றிற்கு கஞ்சி வைத்துத் தருகிறேன். உணவு முடிந்தவுடன் அவற்றை இந்தக் கூடைக்குள் வைத்து பாதுகாக்கிறேன்" என்றார். பகவானின் பரம காருண்யத்தைக் கண்டு குஞ்சு சுவாமி வியந்து நின்றார்.

அதேசமயம் தாம் சில நாட்களாக பகவானிடம், "ஆத்ம ஞானம் பெற சீரிய வழி எது? எனக்குப்

போதிக்கவும்” என்று கேட்டது குஞ்சு சுவாமிக்கு நினைவுக்கு வந்தது. நாய்க் குட்டிகளுக்கு கஞ்சி தரும் வழியில் தனக்கும் பகவான் உபதேசம் அளித்து விட்டார் என்று வியந்து உணர்ந்தார் சுவாமி.

“நாலையும் பிடி”, என்று பகவான் கூறியது நான்கு நாய்க் குட்டிகளைப் பிடிப்பது மட்டுமல்ல. குஞ்சு சுவாமிக்கான வழி காட்டலும் அதில் அடங்கி உள்ளது. நாம் ஆத்ம ஞானம் பெற வேண்டுமெனில் சாதன சதுஷ்டயம் எனப்படும் நான்கு நெறிகளையும் விடாமல் பின்பற்ற வேண்டும் அவை:

*1) நித்யா நித்ய வஸ்து விவேகம் - எது நிலையானது, எது நிலையற்றது என்பதை உணரும் ஆய்வறிவு.*

*2) ஸமதமாதி ஷட்கஸம்பத்திஹி (சமம், தமம் உபரதி திதிக்ஷை சிரத்தை சமாதானம்) முதலிய ஆறு உயர் பண்புகளை கடைபிடித்தல்.*

*3) இஹாமுத்ர பல போக விராகம் விஷய வஸ்துக்களின் மீதுள்ள ஆசைகளை கைவிடல்.*

*4) முமுட்சுத்வம் - பரமார்த்தாவையே அடைய வேண்டும் என்ற இடையறாத ஆவல்.*

நாய்க் குட்டிகளைப் பற்றிக் கூறுவதுபோல், “சாதன சதுஷ்யம்” எனப்படும் ஆத்ம ஞானத்திற்குத் தேவையான நான்கு உயரிய பண்புகளை இடைவிடாது பின்பற்றுக என்று பகவான் உபதேசிக்கிறார்.

“ஒவ்வொன்றாக விடு” என்பது இரண்டாவது உபதேசம். முதல் உபதேசத்தில் சாதகன் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு பண்புகளை பற்றிக் கூறிய பகவான், இந்த இரண்டாவது உபதேசத்தில் ஆத்ம சாதனைக்குத் தடைக் கல்லாக இருக்கும் தீய பண்புகளை கைவிடுவதன் அவசியத்தைக் கூறுகிறார்.

நம்மிடம், சம்ஸ்கார வசத்தால் நற்பண்புகள் மட்டுமன்றி பல தீய, ஆத்ம சாதனையைத் தடை

செய்யும் பல்வேறு தீய பண்புகள் வந்து சேர்ந்துள்ளன. அவற்றைக் களைவது சாதகர்க்கு அவசியம். அதேசமயம், அத்தனை தீய பண்புகளையும் ஒரே சமயத்தில் விடுதல் இயலாத காரியம். எனவே எத்தகைய தீய பண்புகள் நம்மிடம் சேர்ந்துள்ளது என்பதை ஆராய்ந்து, அவற்றை ஒவ்வொன்றாக களைந்து எறிதல் நமது முயற்சியில் வெற்றி பெறச் செய்யும்.

இதே கருத்தை வள்ளுவரும் கூறுகிறார்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

எந்தெந்த தீய குணங்களை ஆய்ந்து அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக நீக்க, அவ்வவற்றால் ஏற்படும் துன்பம் படிப்படியாக ஒழியும். ஒரேடியாக அத்தனையும் நீக்குதல் சாமான்யருக்கு இயலாது. அதேசமயம் ஒவ்வொன்றாக நீக்குதல் சாதனையில் வெற்றி பெறச் செய்யும்.

இதே கருத்தை கந்தர் அலங்காரத்தில் 16 ஆவது பாடலில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றத் திறக்கத் தொளக்கவை வேல்
விடுங்கோ னருள் வந்து தானே யுமக்கு வெளிப்படுமே."

பொருள்: எப்போதும் எண்ண அலை பாய்ந்து கொண்டு இருக்கிற மனத்தை ஒருமுகப்படுத்தி, சத்குருவை நோக்கிச் செலுத்தி, கோபத்தை அறவே நீக்கி, ஏழை எளியவர்க்கு உதவி செய்து சிந்தனையும் செயலும் அற்று இருந்தவாரே இருப்போமாயின் கோபாவேசமான சூரபத்மனையும் கிரௌஞ்ச மலையை பொடியாகும்படி வேற்படையை விடுத்த முருகவேளின் அருள் தானாக வந்து நம்மை ஆட்கொள்ளும்.

‘இருந்தபடி இருங்கோள்’ என்பது மிக அழகிய உபதேசம். நம்முடைய இயற்கைநிலை தெய்வீகமானது. ஆனால் மனத்தில் எழும் ஆசையினால் விஷயவஸ்துக்களை அடைய வேண்டும் என்ற சிந்தனைகள் கிளப்புகிறது. செயற்கையான நிலையற்ற விஷய வஸ்துக்களை நாடிச் செல்லாமல் நமது இயற்கையான ‘உள்ளதான’ நிலையிலேயே நீடித்து இருப்பது பகவான், ‘உள்ளது நாற்பது’ நூலில் கூறுவதுபோல் ‘உள்ள பொருளை உள்ளத்தே உள்ளல்’ வேண்டும்.

பகவான் கூறும் அழகான உதாரணம், “ஈசன் பேரில் பாரத்தை போடவும். சகல கார்யங்களையும் ஒரு பரமேஸ்வர சக்தி நடத்திக் கொண்டு இருக்கிறபடியால் நாமும் அதற்கு பணிந்து போவதே நல்லது. அதை விடுத்து தனது புத்திசாலித்தனத்தால் எல்லாம் சாதித்து விட முடியும் என்றிருப்பது விவேகச் செயலாகாது. புகைவண்டி சகல பாரங்களையும் தாங்கிக் கொண்டு போவது தெரிந்து இருந்தும், அதில் ஏறிக்கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் கீழே போட்டு விட்டு சும்மா இராமல் அதைத் தலையில் தாங்கிக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்?”

இறைவன்மீதும் அனைத்து படைப்பு மீதும் சுயநலம் அற்று அன்பு செலுத்தும்போதும் அன்பே சிவமாகிறது. இதுவே திருமூலர் வாக்கு. இதுவே பகவானின் வாழ்க்கை.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# ரமண புராணம்

## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (91– 104)

*பேணியார் வாழப் பிழைபடா ஆகாய*
*வாணியாய் ஆசிவழங்கு திருவாய் மொழியோன்*
*தாணுவாய் அன்பர் குடிதாங்கும் ஒரு மொழியால்*
*ஆணை நடாத்தி அனைத்துயிரும் நன்கு ஆள்க. ..(94)*
*ஆதார சத்திக்கும் ஆதார பீடமாம்*
*பாதார விந்தப் பழமுதலோன் எண் நான்கு*
*அறம் தாங்கி நின்ற உலகன்னையைத் தன் வாமப்*
*புறம் தாங்கு கின்ற அருட் புண்ணியன் தான் முக்கரணம்*
*ஆன நேர் வாக்கு மனம் காயம் வாசியோ*
*டியானை தேராப் பண்ணி ஏறி உலாப் போந்து. .. (100)*
*அறிஞர் இதய சிங்காதனத்து நாளும்*
*குறியாய் இருந்து செங்கோல் ஓச்சி வஞ்சத்*
*திருகுடைப் பொல்லாத் தெருமரலைச் சேதித்து*
*ஒரு குடைக்கீழ் மன்னுயிரை உள்ளம் உவந்து*
*ஆள்க. . (104)*

*பேணியார் வாழப் பிழைபடா ஆகாய*
*வாணியாய் ஆசிவழங்கு திருவாய் மொழியோன்*
*தாணுவாய் அன்பர் குடிதாங்கும் ஒரு மொழியால்*
*ஆணை நடாத்தி அனைத்துயிரும் நன்கு ஆள்க*

*அரும்பத விளக்கம்:*

பேணியார் - வழிபடுபவர், போற்றுபவர்; ஆகாயவாணி - வான் வழி மொழி, ஆகாயத்தில் இருந்து வரும் தெய்வ மொழி; தாணு - தூண்; குடி தாங்கும் - வாழ்வளிக்கும்; ஒரு மொழி - ஒரே சொல்.

போற்றி வழிபடுவர் வாழ ஆகாய வாணியாய், உருவம் அற்ற, குற்றம் அற்ற (அகந்தை அற்ற) தெய்வ போதனையாக ஆசி வழங்கும், திருவாய் மொழிபவன். தூண் போல் அன்பர்களின் குடியைத் தாங்கும் வண்ணம் ஒரே சொல் கொண்டே ஆணை செலுத்தி, அன்பர்கள் உய்ய பகவான் அனைத்து உயிரினங்களையும் நன்கு ஆண்டு அருள்க.

*பிரம்மாஸ்திரம்*

அந்த ஒரே சொல் "நான் யார் " விசாரமே. அதாவது "சும்மா இரு " எனும் போதனையே. இதை காவ்ய கண்ட முனிவர் போன்ற ரமண அன்பர்கள் பகவானின் "பிரம்மாஸ்திரம்" என்றே கூறுவர். யார் வந்தாலும் பகவான் இதையே உபதேச மொழியாக கூறுவார். கேட்டால் எனக்குத் தெரிந்தது

இது ஒன்றே. வேறு மந்திர உபதேசம் வேண்டுமென்றால் "நாயனா" (கணபதி முனிவர்) போன்றோரிடம் கேளுங்கள் என்பாராம்.

சிவபுராணத்தில், "உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்னும் வரிகள் நினைவு கூறத்தக்கது.

*ஆகாய வாணி*

ஒரு சமயம் ஜூப்ளி கொட்டகையில் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. நிகழ்ச்சி முடிந்ததும் பாடியவர்கள் பெயர், மற்றும் பக்கவாத்தியாக் காரர்களின் பெயர் கூறப்பட்டது. "ரேடியோ பாடுகிறது பேசுகிறது. அதில் பங்கு கொண்டவர் பெயர்களைக் கூறுகிறது. ஆனால் அந்தப் பெட்டிக்குள் யாரும் இல்லை. அதைப்போலத்தான் நம்ம இருப்பும், ஆகாயம் போல் இருக்கிறது. இந்த உடம்பு ரேடியோ போல் பேசினாலும் உள்ளே ஆசாமி இல்லை. சாமிதான் இருக்கார் "என்று தன் சுவானுபவத்தை விளக்கினார்."

*அகந்தை அற்ற சொல்லுக்கு பிழைபடா ஆகாய வாணி என்று கூறப்பட்டது. ஆன்மிக சிந்தனையில் பிழை, குற்றம் என்றால் அகந்தை ஒன்றே.*

*ஆதார சத்திக்கும் ஆதார பீடமாம்*
*பாதார விந்தம் பழமுதலோன் எண் நான்கு*
*அறம் தாங்கி நின்ற உலகன்னையைத் தன் வாமப்*
*புறம் தாங்குகின்ற அருட் புண்ணியன்*

*அரும்பத விளக்கம்:*

*பாதாரவிந்தம் = பாதம்+அரவிந்தம், கமல பாதம்; பழ முதலோன் = பழமைக்கும் முதலோன்; எண் நான்கு = 8x4=32, அறம் = தர்மம் (32 அறங்கள் = அன்னதானம், ஓதுவித்தல், சிறைப்பட்டோருக்கும் உணவு அளித்தல், ஊருக்கு உணவளிப்பது, கண்ணேறு கற்றல், பசுவுக்கு வாயுறை வழங்குதல், ஆவினம் பெருக சேவினம் விடுதல்; தர்ம கல்யாணம், நோய்க்கு மருந்து, எண்ணெய் ஈதல், கடன் தீர்த்தல், மடம் கட்டுதல்; இப்படியாக...)*

*வாம புறம் = இடது பாகம்*

*சக்தியே அனைத்து உலக இயக்கத்திற்கு ஆதாரம். அதற்கான ஆதார பீடமாக இருந்து ஒளிர்வது பழமுதலோன் ஆன அருணாசல ஆத்மன். ஆத்மனே அனைத்திற்கும் ஆதாரமாய் அசலனாய் இருந்து ஒளிர்வது. சக்தி என்பது இயக்க வடிவம். அது மாயை. தானாய் ஒளிராது. அந்த சக்தி காஞ்சியில் இருக்கையில் 32 அறங்களைச் செய்து தவ வாழ்க்கை வாழ்ந்தாள். அந்த அன்னைக்கு அருணாசலத்தில் இடபாகம் அளித்து, சக்தி ஒடுங்கிட ஓங்கும் அருணாசலனாக திகழ்கிறார்.*

*காஞ்சி காமாட்சி*

*கயிலையில் ஒரு சமயம் சிவனின் திருக்கண்களை கணப்பொழுது தன் கையால் அன்னை மூடினாள். அப்போது உலகம் இருண்டு பாவம் பெருகி அது*



கருமை நிறமாக மாறி அன்னையின் திருமேனியில் படிந்தது. கைகளை விலக்கிக் கொண்ட போது உலகம் ஒளி பெற்றது. ஆனால் அன்னையின் உருவில் மாற்றம் இல்லை. கருமையான அன்னையை காளி என்று அழைத்தார்கள். பாவ விமோசனம் வேண்டி அன்னை காசியில் அன்னபூரணியாக இருந்து தர்மங்கள் செய்து தென்நாட்டின் காஞ்சியம்பதி வந்தடைந்தாள். காஞ்சியில் கங்கணேசம், கடகேசம் என்ற லிங்கங்களை ஸ்தாபித்து ஆதி பீடம் அமர்ந்து 32 அறங்களைச் செய்து சிவனை நோக்கி தவமிருந்தாள். ஒருமுறை கம்பா நதிக் கரையில்

*அன்னை ஒற்றை மாவடியில் ஓர் அழகிய மணல் லிங்கம் உருவாக்கி வழிப்பட்டு வரும்போது சிவன் அன்னையை சோதிக்கும் பொருட்டு கம்பா நதியில் வெள்ளத்தை உருவாக்கினார். அன்னை வெள்ளத்தால் மணல் சிவலிங்கம் பாதிக்கா வண்ணம் முழங்கால் ஊன்றி, இரு கைகளாலும் நெஞ்சார அணைத்துக் கொண்டு பாதுகாத்தாள், சிவன் அங்கு தோன்றி அன்னைக்கு வரம் வழங்கிட அன்னையின் கரிய நிறம் வெள்ளத்தில் கரைந்து சென்று அன்னை மேனி பொன்நிறமாக பொலிவடைந்தது. அதனால் கௌசிகி எனப் பெயர் பெற்றாள் சிவனால் அன்னையே பார்வதி என்று உணர்த்தப்படுகிறாள். பார்வதி அன்னை அருணாசலம் சென்று கௌதம முனிவரின் வழிகாட்டுதலுடன் தவமியற்ற சிவன் ஆணை இடுகிறார். அருணாசலத்தில் பச்சையம்மன் என்பதாக தவம் இயற்றுகிறாள். அதன்பயனாக இறைவனிடம் இடபாகம் பெற்றாள். இயக்க வடிவம் (அகந்தை) அசலமாக ஆத்மனில் ஒடுங்கி ஓங்கியது.*

*...............அருட் புண்ணியன் தான் முக்கரணம்*
*ஆன நேர் வாக்கு மனம் காயம் வாசியோ*
*டியானை தேராப் பண்ணி ஏறி உலா போந்து*
*அறிஞர் இதயச் சிங்காதனத்து நாளும்*
*குறியாய் இருந்து செங்கோல் ஓச்சி வஞ்சத்*
*திருகுடைப் பொல்லாத் தெருமரலைச் சேதித்து*
*ஒரு குடைக்கீழ் மன்னுயிரை உள்ளம் உவந்து ஆள்க*

*அருட் புண்ணியன் = ஆத்மன்; முக்கரணங்கள் = மூன்று கரணங்கள், வாக்கு மனம், காயம்; நேர் = நேர்மையான, முக்கரணங்களான (நேர் வாக்கு மனம் காயம்) = மூன்று கரணங்களாகிய; நேர்மையான உள்ளம் = நேர்மையான உரை, நேர்மையான உடல்; வாசி ஓடியானை = மூச்சுக் காற்று ஓடுகின்றவனை; உலாப் போந்து = உலா வந்து; அறிஞர் இதய சிங்காதனம் = அறிஞர் இதய*

சிம்மாசனத்தில் உரை வீற்று இருத்தல். அறிஞர் என்றால் கற்று அறிந்த மேலோர், இங்கு உயிர் தத்துவத்தை நன்கு அறிந்த விவேகிகள். செங்கோல் ஓச்சி = நேர்மையான அரசாட்சி செய்தல்; வஞ்சத் திருகு = வஞ்ச முறுக்கு, வஞ்சச் சுழல், திருகு அளவி என்பது பொருளின் தடிமனைக் காண உதவும் (screw gauge); தெருமரல் = அலமரல் என்னும் சொல்லும் தெருமரல் என்னும் சொல்லும் சுழலல் என்பதன் பொருள் படும். இங்கு மனக் கலக்கத்தை குறிக்கிறது. சேதித்தல் = அழித்தல், ஒடுக்குதல். மன்னுயிர் = மண்ணில், பூமியில் வாழும் உயிர்கள்.

ஆத்மன், நேர்மையான (சுத்தமான) வாக்கு, மனம், காயம் இவற்றுடன் சுவாசம் ஓடுகின்றவனைத் தேராகக் கொள்கிறான். அத்தகைய தேரின் மேல் ஏறி உலா வருகிறான், ஆத்மனுக்கு, ஆத்மஞான விவேகிகளின் இதயமே சிம்மாசனம்.

ஆத்மன் என்றும் எப்போதும் அவர்களின் இதயத்தையே குறியாகக் குடி கொண்டு செங்கோல் ஓச்சுகிறான். வஞ்சகச் சுழல் கொண்ட பொல்லாத மனக் கலக்கத்தை ஒடுக்கி ஒருகுடைக்கீழ் மன்னுயிர்கள் அனைத்தையும் உள்ளம் உவக்க ஆள்கிறான். அத்தகைய அவன் ஆட்சி வளர்க.

நேர் வாக்கு மனம் காயம் (நேர்மையான மனம், வாக்கு, காயம் ) பதஞ்சலி முனிவரின் பங்களிப்பு.

“தூய்மன மொழியர் தோயும் உன் மெய் அகம்
தோயவே அருள் என் அருணாசலா”

- அருணாசல அக்ஷரமணமாலை 47

தூய்மையினால் பண் பட்ட மனமும் வாக்கும் கொண்ட பக்குவிகள் இரண்டற்ற உன் மெய் அகத்தில் திளைத்து நிற்பதுபோல் எனக்கும் அருள்வாய் அருணாச்சலா.

மனோ வாக் காயம் என்று மூன்று சொல்கிறோமல்லவா? மூன்றுக்குமே பரம உபகாரம் பண்ணுவதான மூன்று ஆதார சாஸ்த்ரங்களை இயற்றிக் கொடுத்த ஒருவர் உண்டென்றால் அது பதஞ்சலி தான்! இது அவருடைய தனிப் பெருமை! இப்படி திரிகரண சுத்திக்கும் அவர் பெரிய உதவி செய்திருப்பதை சொல்லி, அவருக்கு நமஸ்காரம்.

பதஞ்சலி 'மும்மலம் அறுப்ப'தற்கே மூன்று துறைகளில் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

மலம் என்றால் அழுக்கு. அது மனம், வாக்கு, காயம் மூன்றுக்கும் ஏற்படக்கூடியது. அழுக்கு இருப்பது இந்த மூன்றுக்கும் ரோகம். அது போனால்தான் ஆரோக்கியம். டாக்டர் கேட்கிற முதல் கேள்வி மல விஸர்ஜமாயிற்றா என்பதுதானே?

மனஸுக்கு ஏற்படுகிற மலம் தப்பான சிந்தனைகள், அது போனால்தான் ஈஸ்வரானுபவம் கிடைக்கும்.

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி

என்று மாணிக்கவாசகர் சொல்கிறார்.

**மனம் (சித்தம்):**

தப்பான சிந்தனை மட்டுமே மலம், நல்ல சிந்தனை என்பது அமலமான ஸத்வஸ்து என்று ஆரம்ப நிலைகளில் இருக்கும். அப்புறம், 'தப்பானது, நல்லது என்ற பேதமில்லாமல் சிந்தனை என்றும், சித்தம் என்றும், மனஸ் என்றும் ஒன்று இருப்பதே மலம்தான். மாயையால் ஆத்மாவுக்கு ஏற்பட்ட அழுக்குதான் மனஸ். அதனால் எதையுமே சிந்திக்காதபடி மனசை அழித்துப் போட்டால்தான் ஆத்மானுபவம் ஏற்படும்.' மனதை அடக்கி பரமாத்மாவோடு சேர்க்கை ஏற்படுத்தித் தருவதாலேயே அதற்கு யோகம் என்று பெயர். பலவிதமான யோகங்கள் இருந்தாலும்

*பதஞ்சலி ஏற்படுத்தியதற்கே ராஜயோகம் என்று பட்டம் கொடுத்திருக்கிறது.*

*வாக்கு:*

*'சித்த மலத்தை யோக ஸூத்ரத்தாலும் (யோகேன சித்தஸ்ய), வாக்கின் மலத்தை மஹாபாஷ்யத்தாலும் (பதேன வாசாம்) போக்கினார். 'பதம்' என்றாலே வியாகரணம், இலக்கண சாஸ்திரம் என்று அர்த்தம்.*

*இலக்கண நூல் 'பதம்' என்று கூறப்படுகிறது. இலக்கணம் எதற்கு? பாஷையை ஒழுங்குபடுத்தி விதிகளைத் தருவதற்காகத்தான். பாஷை என்பது சொற்களைத்தான் தாய்ச்சரக்காகக் கொண்டது? சொல்தானே பதம்? அதனால் பதம் என்றாலே இலக்கணந்தான். பதேன வாசாம் (மலம் அபாகரோது)': 'பதத்தினால் பதஞ்சலி வாக்கின் மலத்தை அகற்றினார்' என்கிற இடத்தில் பதம் என்பது அவர் எழுதிய வ்யாகரண புத்தகத்தை குறிக்கிறது. .*

*அடுத்து காயம்:*

*முக்கரண சுத்திக்கும் உயர்ந்த சாஸ்திரங்களைக் கொடுத்துள்ள அவர் காய சுத்திக்குக் கொடுத்திருக்கும் வைத்ய சாஸ்த்ரத்திலேயே த்ரீதாது சுத்தி என்பதாகப் பித்தம், வாதம், கபம் என்ற மும்மலங்கள் நீங்க வழி சொல்லியிருக்கிறார்!*

*ஆயுர்வேதத்தின் ஆதார சாஸ்திர புஸ்தகம் அவர் எழுதியதுதான். சரகம் என்று அதற்குப் பேர். அவருக்குச் சரகர் என்று பெயர் உண்டாதலால் அவர் எழுதியது 'சரகம்'. ஆத்ரேயர் என்று அவருக்கு இன்னொரு பேர் இருப்பதை வைத்து, அதை ஆத்ரேய ஸம்ஹிதை என்றும் சொல்வதுண்டு.*

*தப்பாக நினைக்காமல் சித்தத்தைத் திருத்தி, அப்புறம் மனதை நிறுத்தியே விடுவதற்கு யோக ஸூத்ரம்; தப்பாகப் பேசாமல் திருத்துவதற்கு மஹா பாஷ்யம்;*

*தப்பாகக் காரியம் செய்யாமல் திருத்துவதற்கு சரகம். (உடம்பு சரி இல்லாவிட்டால் கண் தெரியாமல், காது கேட்காமல், நடக்க முடியால், கார்யம் செய்ய முடியாமலாகிச் செய்வதெல்லாம் தாறுமாறாகத் தானே போகிறது? இதைத் திருத்தி நல்லபடி ஆக்கத்தான் வைத்திய சாஸ்திரம்.) என்றிப்படி மூன்று உத்தம நூல்களைக் கொடுத்திருக்கிறார்.*

*- ஆதாரம் மகா பெரியவரின்*
*தெய்வத்தின் குரல், பாகம் 5)*

*அனைத்துயிரும் ஒரு குடைக்கீழ்:*

*பிரம்மா முதல் புழு பூச்சி வரை உள்ள, எல்லா ஜீவராசிகளின் உள்ளும் அந்தர்யாமியாக இருப்பது ஆத்மாவே. உடல் வீடு. உள்ளே ஊடுருவி இருப்பது ஆத்மா. தேகம், தேகி இவைகளின் இயல்பை ஆராய்ந்து அறிபவன் அறிஞன். வீடே வீட்டுக்காரர் ஆகாதது போல், தான் இருக்கும் தேகமாக தான் ஆகமாட்டான். ஒவ்வொரு உடலாலும், மனதாலும் செய்கின்ற புண்ணிய பாவங்கள், தர்மா அதர்மங்கள், அவற்றினால் ஏற்படும் சுகதுக்காதி அனுபவங்கள் முதலான இவை எதுவுமே, இந்த உடலில் அந்தர்யாமியாக உள்ள ஆத்மாவின் சொரூபமோ, தர்மமோ ஆகாது.*

*சகல உயிர்களின் உள்ளத்தின் உள்ளும் அமர்ந்துள்ள சைதன்ய சொரூபம் ஆத்மாவாகிய "நானே". இதனால் உயிர்கள் எவ்வித மனக் கலக்கமும் இன்றி, கலங்கும் மனதை அதன் மூலமாகிய ஆத்மாவில் ஒடுக்கி பூரண நிர்வாண சுகத்தில் நிற்பது என்பதுவே இங்கு கூறப்படுவதன் பொருள். அப்படி ஆத்மாவில் நிலைப்பதால் தனக்கு அன்னியமாக எதுவும் இராது. அதனால் அனைத்தும் தான் ஆவதால், எல்லாமாய் குடை நிழலில் நிற்பதுவும் இரண்டற்ற ஆத்மாவே. எனவே அது ஒருகுடைக்கீழ் எனப்படுகிறது.*

பகவான் அருணாசல அஷ்டகத்தில் இதையே கூறுகின்றார்.

**"அகம் உதிதலம் எது என உள் ஆழ்ந்து**
**உளத்தவிசு உறின், ஒரு குடை நிழற் கோவே!"**

நான் உதிக்கும் இடம் எது என நாடி உனக்குள் இதயத்தில், இதய சிம்மாசனத்தில் மூழ்கிவிட்டால், ஒப்பற்ற ஒரே குடையின் கீழ் அனைத்துலகையும் ஆளும் அரசனாவாய்.

மேலும் தொடர்ந்து காண்போம்

## ரமண மகரிஷி தொலைக்காட்சி தொடர்

*புகழ்பெற்ற கதாசிரியர், தொலைக்காட்சி தொடர் இயக்குநர், பாம்பே சாணக்யா அவர்கள் இயக்கத்தில் பகவான் ரமண மகரிஷிகளின் சரிதத்தினை மகரிஷி என்னும் தலைப்பில் 26 பகுதிகள் கொண்ட தொடர் டிசம்பர் மாதம் முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.*

*இந்தத் தொடர் பகவானது வாழ்க்கை வரலாற்றினை, பகவானை நேரில் தரிசித்த தலைமுறை பெரியோர்கள் அதற்கு அடுத்த தலைமுறை மற்றும் இன்றைய இளைய சந்ததியினர் குடும்பங்களில் நடைபெறுவது போன்ற கதைக்களத்தில் உருவாக்கியுள்ளார்.*

*மேலும் சூரி நாகம்மா போன்ற பழம் பக்தர்கள் பாத்திரப்படைப்பு பகவானுடன் தங்கள் நினைவுகளை நேரில் வந்து விவரிப்பதுபோன்ற காட்சி அமைப்புகளும் இக்கால சந்ததியினர் பகவான்மீது எவ்வளவு பக்தியும் பிரேமையும் கொண்டுள்ளனர் என்பதையும் சிறப்பான திரைக்கதை அமைத்து காட்சிப் படுத்தி ஒளிப்பரப்பினை வாரவாரம் செய்து வருகின்றனர்.*

*சங்கரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் இந்தத்தொடரினை கீழ்க்கண்ட முகநூல் மற்றும் YouTube இணைப்பின் வாயிலாகவும் அன்பர்கள் தொடர்ந்து கண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

Facebook: https://www.facebook.com/watch/?v=1003290184961418
YouTube: https://www.youtube.com/playlist...

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### *27. ஞான நிலை*

*குறள் 261: தற்புருட மாமுகந் தன்னிற் றனியிருந்*
*துற்பன மஞ்சை யுரை.*

*[இந்தக் குறள் தொடங்கி மிக முக்கியமான மற்றும் சைவ சித்தாந்த மறைபொருள் மற்றும் ஆழ் பொருள் கொண்ட குறட் பாக்கள் அவ்வையாரால் வழங்கப்பட்டுள்ளன. சற்று மெதுவாகப் படித்து, ஆழ்ந்து சிந்தித்து, பாக்களின் பொருளை ஒருமுக நோக்குடன் பயின்றால் தத்துவ ஞானம் சித்திக்கும்.]*

அருஞ்சொற்பொருள்: தற்புருடம் - நாதம், பிந்து, கலை ஆகியவற்றின் நடுநிலையாகும்; மா - பெருமை பொருந்திய; அஞ்சை - வாய், மூக்கு, கண், செவி, உடல் ஆகிய பஞ்சேந்திரியங்கள்; உரை - கலக்க வைத்தல்.

விளக்கம்: உயிர்களை ஞான வழிப்படுத்த உயிர்களின் உள்ளே உறைந்து அவர் அறியாமலேயே அவர்களை நல் வழியில் நடத்துவிக்கும் ஆற்றல் “மறைப் பாற்றல்” எனப்படும். இறைவன் சக்தியில் ஒடுங்கி இருக்கும் மாயை நித்யப் பொருளாகும். இது ‘பரிக்கிரஹ மாயா சக்தி’ எனப்படும். இறைவன் அருட் சக்தியைக் கடந்து அது மாமாயையைக் கலக்க, அதன் கண் உலகும், உடல் கருவி கரணங்களும் பிறவும் தோன்றுகின்றன.

மாமாயை கலங்கிடச் சிற்றம்பலத்தே நடாத்தும்

எனச் சிவனின் இச்சக்தி கூறப்படுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நம்முள் அடங்கிய ஞானத்தை அகங்காரம் மறைத்தலைக் குறிப்பிடும்போது ‘அமி’

*என்னும் வங்காள மொழிச் சொல்லைப் பயன்படுத்தி அது இருவகைப்படும் என்கிறார். தூய்மையற்ற அகங்காரமே அழிவுக்கும் மறு பிறப்பிற்கும் வழி செய்யும். இதை "கச்சா அமி" என்கிறார். தூய்மையற்ற தன்முனைப்பு நம்மை அழிவுக்கு இட்டுச் செல்வது எனக் குறிப்பிடுகிறார். இந்த தூய்மையற்ற கேடான அகங்காரம் காமம், குரோதம் போன்ற தீய பண்புகளாய் வெளிப்படுகிறது. அதேசமயம் தூய்மையான அகங்காரமான "பக்கா அமி", தான் செய்யும் நற்செயல்களாக வெளிப்படுகிறது. அதுவே இறுதியில் ஆத்ம சாட்சாத்காரத்திற்கு வழிவகுக்கிறது.*

*அழிவிற்குத் துணை போகும். இந்த "கச்சா அமி" மாயை -- உடலைச் சார்ந்தது -- என்றும், தூய்மையான "பக்கா அமியை" தூமாயை என்றும் வரையறுக்கலாம். மாயையில் சிக்காது இறைவன் பற்றையும் சகல உயிர்களிடம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடனும் பயின்று வரும் தூமாயையில் உந்தப்படுகிற, இதுவே சிவனின் படைப்பாற்றலால், என்றும் அறியப்படும் பொருள் நிலையில் முற்றுணர்வால் உணரப்படுகிறது.*

*குறள் 262: தற்புருட மாமுகமேற் றாரகை தன்மேலே*
*நிற்பது பேரொளி நில்.*

*[அருஞ்சொற்பொருள்: பிந்து சக்தி தத்துவம்*

*1. மூக்கின் இடது நாசித்துவாரத்தின் வழியே நடைபெறும் சுவாசம் இடகலை எனப்படுகிறது. இதற்கு 'சந்திரகலை' என்றொரு பெயரும் உண்டு.*

*2. மூக்கின் வலது நாசியில் நடைபெறும் சுவாசம் பிங்கலை எனப்படுகிறது. இதற்கு 'சூரிய கலை' என்றொரு பெயரும் உண்டு.*

*3. இரண்டு நாடிகளிலும் ஒருசேர நடக்கும் சுவாசத்திற்கு 'சுழுமுனை' என்று பெயர்.*

*ஆக இம்மூன்றுச் செயல்களையும் நமது நாசி செய்துவருகிறது. இதனை ‘சரவோட்டம்’ என்பார்கள்.*

*கபால மோட்சம் குறித்து கடோபநிடதம் விரிவாக கூறுகிறது. ஒரு சீவன் பிறக்கும் போது பிராணன் உச்சந்தலையில் உள்ள பிரம்மரந்திரம் எனும் துளை வழியாக சட உடலில் குடிகொண்டதால், பிராணன் இந்த சட உடலை விட்டு நீங்கும் போது, அது முன்னர் வந்த வழியான உச்சந்தலையில் உள்ள பிரம்மந்திரம் வழியாக மீண்டும் வெளியேற வேண்டும். உடலின் வேறு துவாரங்கள் வழியாக பிராண சக்தி வெளியேறினால், அந்த சீவன் மீண்டும் மறு பிறப்பு எடுத்து வாழ்க்கை எனும் துன்பக் கடலில் உழன்று கொண்டே இருக்க வேண்டியது என கடோபநிடதம் கூறுகிறது.*

*பல ஞானிகள் தங்களின் உயிர் பிரியும் காலத்தை கிழமை, நாள் மற்றும் நேரத்துடன் முன் கூட்டியே சொல்லும் திறன் உடையவர்கள். உடலிருந்து உயிர் பிரியும் நேரத்தில் தியானநிலையில் அமர்ந்து கொண்டு, பிராணசக்தியை கபாலத்தில் உள்ள பிரம்மரந்திரம் எனும் உள்ள துவாரம் வழியாக மேலே கொண்டு வந்து வெளியே விட்டு விடுவார்கள்.]*

பொருள்: பிந்து கலை எனப்படும் சந்திர கலை யோக சாதனையில் மேல் எழும்பும்போது அதன் உச்சியில் பேரொளி திறக்கும்.

விளக்கம்: மேல் நிலைத் தியானத்தில் தலையில் உதிக்கும் பிந்துவையும் நாதத்தையும் பிராண சக்தியால் நடத்திச் சென்று ஞானாசிரியன் காட்டும் வழியில் சென்றால் சந்திர கலையில் ஊறும் அமுதத்தை அடையலாம். ஞானாசிரியன் திருவடிகளையே பற்றி அதே சாதனையில் ஈடுபட்டால் அஞ்ஞானம் ஆகிய இருள் நீங்கி அருள் பிரகாசம் ஒளிரும். இதே கருத்தைத் திருமூலர் திருமந்திரத்தில் விளக்குகிறார்.

*"மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்*
*கோலால் நடத்திக குறிவழி யேசென்று*
*பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றினால்*
*மாலா னதுமாள மாளுமவ் விந்துவே."*

*(திருமந்திரம் 1956)*

*பொருள்: அக்ஞா சக்ரத்தில் தோன்றுகின்ற விந்துவும் நாதமும் விந்தின் வீரியமும் அடங்கும்படி சுழுமுனையில் (சுஷும்னா நாடி) மனத்தை வைத்து தியானம் செய்தால் பிரம்மரந்திரத்தின் (உச்சந்தலைப் பகுதி) வழியே போய், பால் போன்ற வெண்மையான மதி மண்டப ஒளியில் பொருந்தி, ஆசை, காமம் போன்ற உலகப் பொருட்கள் மீதுள்ள பற்றை விட்டால் பால்போன்ற ஞானமதி ஒளியில் அஞ்ஞானம் அழிந்து விடும்.*

*குறள் 263: ஓதிய தற்புரு டத்தடி யொவ்வவே*
*பேதியா தோது பிணை.*

*பொருள்: பிந்துகலையை சுழுமுனை நாடியில் மேலே கொண்டு செல்லும்போது, சூரிய, சந்திர கலைகளை ஒன்றோடு ஒன்றாக்கி இடபிங்கலை நாடிகளுடன் வேறுபடாது சேர்த்து பிரணவத்தின் உச்சியில் துவாத சாந்தம் பெருவெளியில் கொண்டு சேர்.*

*விந்துவெண் வீசத்தை மேவிய மூலத்து*
*நந்திய அங்கியி னாலே நயந்தெரித்*
*தந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்*
*சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே.*

*என்பது திருமந்திரத்தின் 1958 ஆம் பாடல். ஜனன மரணத்திற்கு எல்லாம் காரணமாகிய ஆசை என்னும் வித்தினை அழிக்கும் உபாயத்தை இந்தப் பாடல் கூறுகிறது.*

*விந்துவே எல்லா ஜீவனுக்கும் வித்து. அது மூலாதாரத்தே குடி கொண்டுள்ளது. யோகாப்யாசத்தால் ஓங்கி எழும் குண்டலினி எனும் அக்கினியால் விந்து என்பதை எரித்து, எழும் சக்தியை முடிவற்ற சூரிய*

*மண்டலத்தில் ஏற்றி, சந்திர மண்டலத்தில் அடங்கச் செய்தால் குளிர்ந்த அமுத தாரை எழும்.*

*குறள் 264: கொழுந்துறு வன்னி கொழுவுற வொவ்வில்*
*எழுந்தா ரகையா மிது.*

*பொருள்: உயர்ந்து எழும் அக்கினியைக் கொம்பினால் கிளறும்போது தீப்பொறி நட்சத்திரங்கள் போல் மேலெழும். அதுபோல ஞானாசிரியனின் மந்திரத்தை ஜபித்து பிரம்மரந்திரத்தில் பொருந்தி இருக்கச் செய்தால் ஞானாக்னி கொழுந்துவிட்டு எரியும். அப்போது பிந்து கலை நட்சத்திர வடிவில் இதயத்தில் காணப்படும்.*

*குறள் 265: மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே*
*குறித்துக் கொளுஞ்சீயைக் கூட்டு.*

*பொருள்: எல்லாவற்றிலும் அடிப்படை ஆகிய பிந்து எனும் சந்திர கலையின் ஆற்றலால் தோன்றிய கண்டமும் (பிரிவுண்ட பகுதி) அகண்டமும் (பிரிவில்லாத பெருவெளி) உருவெடுத்து வர, வான், புவி முதலிய ஐம்பூதங்களாகிய மாயையில் தோன்றுகிறது. விந்து அதன் உள்ளும் புறமும் விளங்கத் தோன்றுகின்றது.*

*குறள் 266: காலுந் தலையு மறிந்து கலந்திடில்*
*சாலவும் நல்லது தான்.*

*பொருள்: பிராணஅபான வாயுக்களை யோகத்தின் தலைப் பொருளாகிய பிரணவத்தையும் பிரம்மரந்திரத்தில் கலந்து அங்கு பிந்து கலையும் சேர்ந்தால் மிக உயர்ந்த நிலை கிட்டும்.*

*குறள் 267: பொன்னொடு வெள்ளியி ரண்டும் பொருந்திடில்*
*அன்னவன் றாளதுவே யாம்.*

*பொருள்: பொன்னாகிய நாதத்துடன் வெள்ளியாகிய பிந்துவாம் சந்திர கலை ஒன்றாகக் கலந்தால், அது*

சிவத்தின் திருவடியாகிய 'ய' என்னும் அக்ஷரத்தைக் குறிக்கும்.

குறள் 268: நின்ற வெழுத்துட னில்லா வெழுத்தினை
யொன்றுவிக் கிலொன் றேயுள.

பொருள்: நின்ற எழுத்து என்பது எப்போதும் வளரவும் தேயவும் இல்லாதது. எப்போதும் பன்னிரண்டு கலைகளுடன் கூடிய சூரிய கலை நின்ற எழுத்து. நில்லா எழுத்து என்பது வளர்ந்து தேய்ந்து வரும் சந்திர கலை. நின்ற எழுத்தாகிய சூரியகலையும், நில்லா எழுத்தாகிய சந்திரகலையும் ஒன்றாய்ச் சேர்ந்தால் ஒப்பிலா மணியாகிய சிவம் தோன்றும்.

குறள் 269: பேசா வெழுத்துடன் பேசுமெழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம்.

பொருள்: சுத்த மௌனத்தில் தோன்றும் பிரணவத்துடன் நாவில் எழுந்து ஒலிக்கும் ஜப சப்தத்துடன் பொருந்திய சிவம் வெளிப்படுகிறது.

மீண்டும் திருமந்திர விளக்கத்தைக் காண்போமா?

"சத்தமுஞ் சத்த மனமும் மனக்கருத்
தொத்தறி கின்ற விடமும் அறிகிலர்
மெய்த்தெறி கின்ற விடமறி வாளர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடந் தானே."

திருமந்திரம் 1973

பொருள்: பஞ்சேந்திரியங்கள் எனப்படும் தம்மைப் சுற்றி உள்ள பிரபஞ்சத்தின் நிகழ்வுகளை அறிவிக்கும் கருவிகள் தரும் புறத்தறிவு இங்கே சத்தம் எனப்பட்டது.

நாதமும் அதனை உணர்கின்ற மனமும், மனக் கருத்தினை அறிகின்ற புலன்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்து ஒருமித்து மாறுபாடின்றி இயங்குகின்றன என்னும் உண்மையை தியானித்து அறியும் ஆத்ம சக்தி படைத்தவர்க்கு சிவபிரானே அறிவாய் விளங்குகிறான்.

*குறள் 270: அழியா வுயிரை யவனுடன் வைக்கில்*
*பழியான தொன்றில்லை பார்.*

*பொருள்: பிந்துவில் இருந்து, தலையைப் பிரித்து, பிரம்மரந்திரத்தில் செலுத்தி விட்டால், விந்து என உருவகப் படுத்தப்பட்ட ஆசைகள் அனைத்தும் அடங்கி, பிறவியில் செய்த பழிகள் ஏழும் தொடராது ஈசன் திருவடிகளைச் சேர்வான்.*

*விதைப்பவர்க்கே அன்றி விதைக்காதவர்க்கு விளைவு மற்றும் அறுவடையின் பயன் ஏதும் கிட்டாது. தீவிர ஆத்ம சாதனை செய்பவர்க்கு அல்லாது ஞானம் கிட்டுவதில்லை. ஆத்ம சாட்சாத்காரம் என்னும் கனியைப் பெற வேண்டுமெனில் 'சாதனை' என்னும் விதையை இட்டு தவறாத பயிற்சி மூலம் பராமரிக்க வேண்டும். இதையே கண்ணன் "அப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச க்ரு'ஹயதே" என அறிவுறுத்துகிறார். சலனமற்ற மனத்துடன் ஆன்மப் பயிற்சி செய்வோர்க்கு, தயிரில் இருந்து வெளிப்படும் வெண்ணெய் போல இதயத்தில் குடி கொண்ட ஞானம் வெளிப்படும்.*

*(தொடரும்)*


**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



# மேனியைக் கொல்வாய்

**_D. தியாகராஜன்_**

*பொதுவாக நாமனைவரும் நமது தேகத்தை நல்ல உணவு, உடற்பயிற்சி போன்றவைகளினால் பேணிக் காக்கிறோம். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியம் என்பதுபோல் உடல் நலத்தையொட்டியே மனநலமும் அமைகிறது. உடல் நலமில்லையெனில் மனதளவில் மிகவும் சோர்ந்து விடுகிறோம். ஆகையால் நம் அனைவருள்ளும் தேகாபிமானம் மேலோங்கியுள்ளது.*

*குருவையோ, ஞானியையோ தரிசிக்க செல்பவர்களும் தேகத்துடன் இலங்கும் மகான்களையே நாடிச் செல்கின்றனர். அந்த மகான் உடலைத் துறந்த பிறகு அந்த குரு மறைந்துவிட்டார் அவர் அருள் எப்படி நமக்கு கிடைக்கும் என்று கருதி தேகத்துடன் இலங்கும் வேறொரு குருவையோ மகானையோ காணச் செல்கின்றோம். தேகத்துடன் இருக்கும் ஞானிகளாலேயே நமக்கு உபதேசம் வழங்கி, நம்மை வழிநடத்த முடியும் என்று நாம் அனைவரும் நம்புகின்றோம்.*

*அழிவில்லாதது, நிலையானது என்ற ஒன்று உள்ளது எனும்போதே நிலையற்றது, அழிவடைவது என்ற ஒன்றும் இருப்பது உறுதியாகிறது. அழிவது எது? இந்த உடல் மரித்து அழிந்து போகின்றது. உடல் மரித்தாலும் ஆன்மா அழியாதது நிலையானது என்பது உறுதியாகின்றது.*

*மரணம் வந்தால் என்னவாகுமோ என்ற பயமோ அல்லது நமக்கு நெருக்கமானவர்களின் மரணத்தை எண்ணித்தான் பொதுவாக நாம் கவலைப்படுகிறோம். நாம் இருக்கும்வரை மரணம் வரப்போவதில்லை.*

*மரணம் வந்த பிறகு மரணித்தவர் அதனால் பாதிப்படைவதில்லை.*

*தோல்வியே அறியாத அர்ஜுனனும்கூட, தனது கையில் காண்டீபத்தை வைத்திருந்தும் மரணத்தை எண்ணி கலங்குகின்றான். அவன், தான் இறந்து விடுவோமே என்று பயப்படவில்லை. தனது உறவுகளை கொல்லப் போகின்றோமே என்று கலங்குகின்றான். கீதையில், விஷாத யோகம் இதை விரிவாக விவரிக்கின்றது.*

*நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளாதவரை அதைப்பற்றிய அதீத அச்சம் நம்மை விட்டு அகலாது. அர்ஜுனனின் அச்சத்தை நீக்க, "உடல் வெட்டப்படும் போதும், கொல்லப்படும் போதும் உடல் உயிரைத் தாங்க முடியாமல் சக்தி இழந்து மரிக்கிறது. மானிட ஆன்மாவிற்கு மரணம் என்பது இல்லை. நீ மேனியைத் தான் கொல்கின்றாய். மரணம் உடலுக்குத்தான். உயிருக்கு அழிவில்லை. நீ கொல்லாமல் விட்டாலும் அவர்களது உடலுக்கு ஒருநாள் அழிவு நிச்சயம் உண்டு" என்று மரணத்தின் தன்மையை இவ்வாறு உரைக்கின்றான் கண்ணன்.*

*பல வருடங்கள் சாதனை செய்த பிறகு இறுதியில் இந்திரன் பிரஜாபதியிடம், "இந்த உடல் இறக்கின்றது. அது மரணத்தால் பீடிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த உடலே, மரணமற்ற, உடலற்ற ஆன்மாவின் இருப்பிடமாக இருக்கிறது. இந்த உடலில் ஜீவனாக இருப்பவன் சுகதுக்கங்களால் பாதிக்கப்படுகிறானே" என்று வினவுகிறார்.*

*பிரஜாபதி, இந்திரனுக்கு அத்வைத உண்மையை (சாந்தோக்ய உபநிஷத்தில்) இவ்வாறு விவரிக்கின்றார்:*

*"இந்த உடலோடு இருப்பவனுக்கு சுகதுக்கங் களிலிருந்து விடுதலை இல்லை. ஆனால் உடலிலிருந்து விடுதலை அடைந்தவனை, அதாவது இந்த ஆன்மாவை*

*அறிந்தவனைச் சுகதுக்கங்கள் தொடுவதில்லை. அவனுக்கு எல்லா உலகங்களும், எல்லா ஆசைகளும் கிடைக்கின்றன. இப்படித்தான் பாரம்பரியமாக ஆசைகளும், மாயையும் மெதுவாக அழிகின்றன. இறுதியில் ஆன்மாவே இருக்கிறது. இரண்டற்றதாக அது ஒளிர்கிறது."*

தனித்துக் குறிப்பிடும்படி சிறப்பம்சம் ஏதுமில்லாத இளம் பாலகனாக, மதுரையில் இருந்த வேங்கடராமன் எதிர்பாராதவிதமாய் பெற்ற மரணானுபவத்தின் மூலமாக இந்த உடல் என்பது என்ன? எது இறக்கிறது? முதலிய எண்ணங்கள் பாலகனுக்குத் தோன்றின. இவை இந்திரனின் கேள்வியோடு ஒத்திருக்கின்றது.

வேங்கடராமன், மரண பயத்தை கண்டு நிலைகுலையாமல் மாறாக, இந்த உடல்தானே சாகப் போகிறது? செத்த உடல் எரிக்கப்படுகிறது. ஆயினும் இந்த உடலோடு 'நான்' அழியவில்லை. 'நான்' என்ற தன்மையை உணர்கிறேன். ஆகையால் 'நான்' இவ்வுடல் அல்ல. அது உடலைக் கடந்த உணர்வு. அதை மரணம் தீண்டாது. அழிவற்றது என்பதை இளம் வயதிலேயே உணர்ந்து ஆத்ம ஞானியாக மலர்ந்தார். ஆகவேதான் அழியும் இந்த உடலுக்கு எப்போதும் பகவான் ரமணர் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

ஒருவன் தான் பிறந்ததாக நினைத்தால் மரண பயத்தைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஒருவன் ஆன்மா எப்பொழுதும் இருக்கிறது, உடல்தான் பிறந்து இறக்கின்றது என்று உணர்ந்தால் அவனுடைய துயரமெல்லாம் நீங்கிவிடும். எண்ணங்களின் எழுச்சியே எல்லாவிதத் துன்பங்களுக்கும் மூலகாரணம் என்று உபதேசிக்கிறார்.

1912 இல் பகவான் மலைமீது வாசம் செய்த காலத்தில் உடனிருந்த அன்பர்கள் ரமணரின் ஜயந்தியைக் கொண்டாட உத்தேசித்தனர். பிறந்தநாளை

கொண்டாட விரும்புபவர்களுக்கு தேகாபிமான பற்றை ஒழிக்க

'பிறந்தநா ளேதோ பெருவிழாச் செய்யீர்'
'பிறந்தநா ளேனும் பிறப்புக் கழாது'

எனும் இவ்விரண்டு பாக்களை இயற்றியருளினார்.

பிறந்தநாள் விழா கொண்டாடத் தீர்மானித்திருக்கும் நீங்கள் உங்களுடைய பிறப்பிடம் ஏதென்று பாருங்கள். ஜனன மரணங்களுக்கு அதீதமான அந்தச் சாசுவத வாழ்வில் எப்பொழுது கால் வைக்கிறோமோ அன்றுதான் நமது உண்மையான பிறந்த நாள். வருடத்திற்கொரு முறை வரும் பிறந்த நாளன்றாவது, இந்தச் சரீரம் நமக்கு வந்துள்ளதே, இந்தச் சம்சாரத்தில் விழுந்து விட்டோமே என்று தவிக்காமல் உற்சாகமாகப் பண்டிகை கொண்டாடி மகிழ்வது பிணத்திற்கு அலங்காரம் பண்ணுவது போலாகும். ஆத்மாவை அறிந்து அதில் ஒடுங்குவதுதான் விவேகம்" என்பது அந்த வெண்பாக்களின் கருத்து.

*[குறிப்பு: பிறந்தநாள் கொண்டாடுவதை பலமாக எதிர்த்த பகவான் பின்னர், வாசு தேவ சாஸ்திரி முதலானோர் மிகவும் மன்றாடி கேட்டுக் கொள்ள பகவான் அதற்கு சம்மதித்தார். அந்த வருடத்தில் இருந்து ரமண ஜயந்தி கொண்டாடப்பட்டு வருகின்றது.]*

மலையாள தேசத்தில் குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்கு ஒரு பழக்கம் உள்ளது. வீட்டில் குழந்தை பிறந்தால் அழுவதும் யாராவது காலமானால் நாதஸ்வரத்துடன் உற்சவம் கொண்டாடுவதும் அவர்கள் வழக்கமாம். உண்மையில் தனது இயல்பான சுகம் போய் இந்த ஜன்மம் வந்ததே என்று விசனப் பட வேண்டுமே தவிர என்ன கொண்டாட்டம்?" என்று கூறும் பகவான் 'உள்ளது நாற்பது அனுபந்த'த்தில் 11 ஆவது பாடலிலும் அதே கருத்தை வலியுறுத்துகிறார்.

*“பிறந்தது எவன்தன் பிரம்ம மூலத்தே*
*பிறந்தது எவண் நான் என்று பேணிப் பிறந்தான்*
*அவனே பிறந்தான் அவன்நிதம்மு னீசன்*
*நவன்நவன் அவன் தினமும் நாடு.”*

பேராசிரியர் குல்கர்னி, ‘பகவான் ரமணரும் பகவத் கீதையும்’ என்ற தனது கட்டுரையில் பகவானைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பகவான் அடிக்கடி கீதையிலிருந்து சுலோகங்களை மேற்கோள்காட்டி அதைத் தனக்கே உரிய வழியில் விவரித்துக் கேள்வி கேட்பவர்களின் உள்ளத்தைத் தன்னுடைய விளக்கத்தால் பிரகாசிக்க வைப்பார். கீதையைப் பற்றி அவர் அளித்த விளக்கங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. மிகவும் தெளிவாகக் கேட்பவர்கள் உள்ளே ஆழமாகப் பாய்ந்து வேலை செய்யும் ஆற்றல் பெற்றவை. ஏனெனில் அவர் கீதையே வாழ்க்கையாக வாழ்ந்தார். எனவே பகவான் கிருஷ்ணரைப் போலவே அதை அதிகாரபூர்வமாக விளக்குவதற்கு ஆற்றல் படைத்தவர். அவர் தன்னுடைய நேரடி அனுபவமாக விளக்கம் அளிப்பவர்.

தேகத்துடன் இருக்கும் ஞானியையே எல்லோரும் தரிசிக்க வேண்டும் என்றும் அவரால்தான் பக்தர்களுக்கு ஆத்ம சாட்சாத்காரம் வழங்க இயலும் என்ற அறியாமை தற்காலத்தில் அனைவருக்கும் இயல்பாக எழுகின்றது.

இதை விளக்கும் குல்கர்னியின் கட்டுரையைத் தொடர்ந்து காண்போம்:

பகவான், பகவத் கீதையின் மொத்தக் கருத்துக்களும் அடங்கிய 42 பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதை வரிசைப்படுத்தித் தொகுத்தளித்தார். மற்றொரு பக்தர் கீதையின் 700 சுலோகங்களும் மனத்தில் வைப்பதற்கு முடியாது. எனவே கீதை சாரத்தை முழுவதும் தன்னுள் அடக்கி இருக்கும் ஒரு சுலோகத்தைக் கூறுமாறு

வேண்ட பகவான், பத்தாவது அத்தியாயம் இருபதாவது சுலோகத்தைக் கூறினார். அதன் பொருள் பின்வருமாறு:

“ஆன்மாக்கள் யாவின் அகத்தின் அமரும் ஆன்மா யான் யாவேன் அர்ச்சுனா! ஆன்மாக்கட்கு ஆதியோடு மத்தியமும் அந்தமும் ஆதியாம் யான் என்று அறி.”

ஒரு பக்தர் இவ்வாறு கேட்கிறார்: கீதை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று கூறுகிறது.

மகரிஷி: ஆமாம். நடிகன் இல்லாத நடிப்பு. ஸ்ரீ கிருஷ்ணர் கர்மயோகிக்கு ஒரு உதாரணமாக இலங்கினார்.

இன்னொரு சமயத்தில் பக்தர் ஒருவர்: தெய்வீகக் காட்சி கடவுளின் பெருமையை அறிய அவசியம். ஆனால் இந்த ஊனக்கண்களோ சாதாரணக் காட்சிகளைத்தான் காண்கின்றனவே?

மகரிஷி: ஓ! அப்படியா! உனக்குக் கோடி சூரியன் பிரகாசமும் காண வேண்டும். அப்படித்தானே!

பக்தர்: கோடி சூரியன் பிரகாசத்தைக் காண முடியாதா?

மகரிஷி: உன்னால் ஒரு சூரியனையே பார்க்க முடியுமா? அப்படியிருக்கையில் ஏன் கோடி சூரியனைப் பார்க்க விரும்புகிறாய்.

பக்தர்: தெய்வீக திருஷ்டியின்மூலம் அதைக் காண முடியும்.

மகரிஷி: அதுசரி! முதலில் கிருஷ்ணரைக் கண்டுபிடி. பிறகு பிரச்சினைகள் தானாகவே தீர்ந்துவிடும்.

பக்தர்: கிருஷ்ணர் உயிரோடு இல்லை.

மகரிஷி: இதுதான் கீதையில் இருந்து நீ தெரிந்து கொண்டதா? கிருஷ்ணர் நான் நிரந்தரமானவன் என்று

*கூறவில்லையா? அவரது உடலையா நீ கிருஷ்ணர் என்று நினைக்கின்றாய்?*

*பக்தர்: அவர் உயிரோடு இருக்கும்போதுதான் மற்றவர்களுக்கு உபதேசித்தார். எனவே அவரைச் சுற்றி இருந்தவர்கள் ஆன்ம சாட்சாத்காரம் அடைந்தார்கள். எனவே நானும் உயிரோடு இருக்கும் குருவைப் பார்க்கிறேன்.*

*மகரிஷி: அப்படியானால் கீதை, கிருஷ்ணர் தன் உடலை விட்டபிறகு உபயோகமற்றுப் போய்விட்டதா? தன் உடலையா அவர் கிருஷ்ணர் என்று கூறினார்? அவர் எப்போதும், நான் இருந்ததில்லை. இன்றும் இல்லை, என்றெல்லாம் கூறவில்லையா?*

*பிறகு பகவான் 'திவ்ய திருஷ்டி' என்பது ஆன்மாவின் பிரகாசம். அதாவது ஆன்மா என்று பொருள் என்று விளக்கினார்.*

*இந்த உரையாடலில் பகவான், "தர்க்கவாதத்தையும் பகுத்தறிவையும் உபயோகித்து எந்தவொரு தயவு தாட்சண்யம் இன்றி சாதாரண மனிதர்களுக்கு இருக்கும் கிருஷ்ணருடைய இயல்பைப் பற்றிய அறியாமையை நீக்குகிறார். கிருஷ்ணர் என்பது எங்கும் நிறைந்த ஆன்மா. அவர் இதயத்தில் இருக்கிறார்" என்று கூறுகிறார்.*

*'உடலோ பிறக்கும் உடலோ இறக்கும்'*
*'உடலோ அறியாது உறக்கத்து இலையே'*
*'உடல்நீ எனும்தீ மதியை ஒழியே' - (ரமண வசனஸாரம்)*

*உடல் அபிமானத்தை ஒழித்தால் உனது சொருபம் தானே ஒளிரும் என்ற பகவானது உபதேசத்தினை, சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள் 44 வரிகளில் எளிமையாக 'ஸ்ரீ ரமண வசனஸார'மாக இயற்றியுள்ளார்.*

*இந்த உடல் ஒரு சுமை போன்றது என்பதை பகவான் எவ்வாறு விளக்கியுள்ளார் என்று 18/1/46*

தின டைரி குறிப்பில் தேவராஜ முதலியார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"காயகல்பம் செய்வதைப் பற்றி பலர் கூறியுள்ள முறைகளைப் பற்றிப் பேச்சு வந்தது. பகவான் கற்பூரம், நூறு வருடம் முதிர்ந்த வேப்பமரம் இவைகளிலிருந்து செய்யப்படும் சில கல்பங்களைப் பற்றிக் கூறினார்.

இதையெல்லாம் கூறிவிட்டுப் பிறகு, இந்த உடலைப் பராமரிக்க இவ்வளவு சிரமம் யார் எடுப்பார்கள். நூலில் கூறியிருப்பது போல் நம்மிடம் உள்ள மிக மோசமான பவநோய் இந்த உடல்தான். ஒருவன் இந்த உடலைப் பலப்படுத்துவதற்காக மருந்து எடுத்துக் கொண்டு வாழ்க்கையை நீடிப்பது என்பது ஒருவன் தனக்குள்ள நோயை நிரந்தரமாக்குவதற்கு மருந்து எடுத்துக் கொள்வதற்கு ஒத்தது. இந்த உடல் பாரத்தை நாம் தாங்குகிறோம். ஒரு கூலி தன் பாரத்தைச் சுமந்து செல்லும்போது அதைச் சீக்கிரமாக கொண்டு இறக்குவதைத்தான் எதிர்ப்பார்ப்பான். அதைப்போலவே நாம் இந்த உடல் பாரத்தை இறக்குவதற்கு எதிர்பார்க்க வேண்டும்" என்றார்.

பகவானின் உபதேசங்களை ரத்தின சுருக்கமாக 'உபதேச ரத்னாவளி'யாக தொகுத்த சாது நடனாநந்தரும் உடல் அபிமானத்தை ஒழிக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாகவே குறிப்பிடுகிறார்.

"மலப்பெட்டியை அபிமானிப்போர்
மலத்தை அபிமானிக்கும் பன்றியினுங் கடையரெனல்."

உபதேச ரத்னாவவளி 51

பகவான் தமது தேக இறுதி நாட்களிலும் பகவான் இறக்கப் போகிறார் என்று வருந்திய அன்பர்களுக்கு "நான் எங்கு செல்ல முடியும்? நான் இங்கே தான் இருக்கிறேன்" உறுதியளித்தார். வருந்திய அன்பர்களுக்கு

பகவான் என்பது வெறும் உடலல்ல என்பதையும் தனது தொடரும் சாந்நித்தியத்தில் உணர்த்தியும் வருகின்றார்.

டங்கன் கிரின்லீஸ் 'என்றும் பிரசன்னம்' என்னும் தனது கட்டுரையில் பகவானின் சாந்நித்யத்தை இவ்வாறு விவரிக்கின்றார்:

"இறுதியில் எல்லா பௌதிக பொருட்களும் கரைய வேண்டும். எனவே துக்கத்திற்கு இங்கு இடமில்லை. நாங்கள் அன்பு செலுத்திய அந்த அரிய உடல் எங்கள் உள்ளத்தில் பொக்கிஷமாக இலங்கிய பகவான் என்று அழைக்கப்பட்ட அந்த உடல், பஞ்ச பூதங்களால் ஆனதனால் காலம் வரும்பொழுது பிரிந்து தனித்தனியாக அந்தந்த பூதங்களில் கலக்க வேண்டும். எந்த ரூபம் நம்முடைய கண்களையெல்லாம் நீண்ட காலத்திற்கு மகிழ்ச்சி அளித்து வந்ததோ அது மறைந்து விடத்தான் வேண்டும்.

இதேமாதிரி கிருஷ்ண பரமாத்மாகூட தன்னுடைய பக்தைகளான கோபிகள் தங்கள் உள்ளத்தில் தன்மீது வைத்த பிரேமையை மேன்மேலும் பெருக்க வேண்டி, தன்னுடைய ரூபத்தை அவர்களுடைய பார்வையிலிருந்து மறைத்து விட்டார். இப்பொழுது அந்த கோபிகள் எவ்வாறு கிருஷ்ணர் முன்னாலேயே என்றும் வசிக்கலாம், தங்களுடைய இதயத்தில் கிருஷ்ணன் நடமாடுவதை என்றும் உணரலாம் என்பதைப் புரிய வைக்க உத்தவரை அனுப்பினார். வெளிப்பார்வையில் தாபத்தோடு தேடும் உருவத்தை, கண்கள் அகமுகப்பட்டு அவருடைய ஆனந்த உருவத்தை இதயத்தில் தரிசிக்கலாம் என்று அவர்களுக்கு கூறுவதற்காக உத்தவரை அனுப்பினார்.

அதேபோலவேதான் நாங்களும் இருந்தோம். 1950ஆம் வருடம் அந்த ஏப்ரல் மாலை தவிர்க்க முடியாதது நடந்து விட்டது. எந்த அரிய உடல் பல

*காலங்களாக எங்களுடைய கருத்தின் மையமாக இருந்ததோ எங்களுடைய இதயத்தின் பார்வையின் நோக்கமாக இருந்ததோ அந்த உடல் எங்கள் கண்களை விட்டு அகன்று விட்டது. அவர் இறந்து போனார் என்று கூற முடியுமா? பகவானுக்கு இறப்பா? இந்த வார்த்தைக்கு அர்த்தமே இல்லை. பிரபஞ்சத்தில் என்றும் வசிக்கும் ஒருவர் எவ்வாறு இறக்க முடியும்? நான் போகிறேன் என்று நீங்களெல்லாம் நினைக்கிறீர்களா? நான் எங்கே போக முடியும்? இங்கே உங்களுடனே இருப்பேன் இந்த வாக்குறுதியைத்தான் எங்களுக்கு அவர் கொடுத்து, பிரிவு என்று கருதப்படுகிற ஒன்றுக்கு எங்களைத் தயார்படுத்தினார். இங்கு திருவண்ணாமலையில் அவரைத் தரிசித்த நாங்கள், எங்களுக்கு அவர் கொடுத்த வாக்குறுதியை நம்பிக்கையோடு பற்றிக்கொண்டு அவர் தொடர்ந்து இருப்பதை உணர்கின்றோம்."*

*இத்தனுவே நானா மெனுமதியை நீத்தப்*
*புத்தியித யத்தே பொருந்தியக நோக்கா*
*லத்துவீத மாமெய் யகச்சுடர்காண் கைபூ*
*மத்தியெனு மண்ணா மலைச்சுடர்காண் மெய்யே*

*- ஸ்ரீ பகவான்*

*இந்தச் சரீரமே நான் என்று நினைக்கும் மனதை (தேகாத்ம புத்தியை) நீக்கி, உள்முக திருஷ்டியால் இதயத்தில் நிலையாக ஒன்றி, ஏகசத்தாகிய உள் ஒளியின் உண்மை சொரூபத்தை உணர்வதே, பூமியின் இதய ஸ்தானமாகக் கூறப்படும் அருணாசல சிகரத்தில் விளங்கும் ஜோதியின் உண்மை தரிசனமாகும் என்று பகவான் நமக்கு அருளிய தீப தரிசன தத்துவத்தின் வாயிலாகவும் உடல் நான் எனும் அபிமானத்தை ஒழிக்க வலியுறுத்துகிறார்.*

*தற்காலத்தில் பொருளை மையமாகக் கொண்டு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த*

உலகத்தில், தேக ஆரோக்கியத்துடன் நாமும் இணைந்து இயங்கினால்தான் நம்மைக் காத்துக் கொண்டு நம்மைச் சார்ந்தவர்களையும் பொருளாதார ரீதியாக நீடித்து வாழவைக்க இயலும் நிலை உள்ளது நிதர்சனம். அதே நேரத்தில் உலகாயத வாழ்க்கையில் இருந்து விலகி ஆன்மிகத் தேடலில் ஈடுபடும் சாதகர்கள், ஆன்மா வேறு, உடல் வேறு என்னும் இந்த சத்தியத்தை சுமார் 54 ஆண்டுகாலம் தேகத்துடன் இருந்து, உடற்பற்று இல்லாமல் கர்மயோகியாக, சாதாரண மானுடர் போல் வாழ்ந்து, செயலில் உபதேசித்து, தனது சாந்நியத்திலும் அதை உணர்த்தி வரும் ரமண குருவின் அருளுடன் படிப்படியாக அந்நிலையை உணர முயற்சி செய்து நாளடைவில் மேனியைக் கொன்று ஆன்மாவை அறியலாம்.

# இனிவரும் திருநாட்கள் 2025

| பூஜை/ விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| பொங்கல் | 14-01-2025 | செவ்வாய் |
| சின்ன சுவாமிகள் ஆராதனை | 12-02-2025 | புதன் |
| மகா சிவராத்திரி | 26-02-2025 | புதன் |
| சுந்தரம் ஐயர் தினம் | 04-03-2025 | செவ்வாய் |
| ஸ்ரீ வித்யா ஹோமம் | 21-03-2025 | வெள்ளி |
| தெலுங்கு வருடப் பிறப்பு | 30-03-2025 | ஞாயிறு |
| ஸ்ரீ ராம நவமி | 06-04-2025 | ஞாயிறு |
| தமிழ் வருடப் பிறப்பு | 14-04-2025 | திங்கள் |
| பகவான் 75ஆவது ஆராதனை | 25-04-2025 | வெள்ளி |



# தட்சிணாமூர்த்தி தோத்திரம்

## சிதம்பர குற்றாலம்

பாடல் 7

இராகுபற்று இரவி திங்கள் எனஉளன் மாயை மூடப்
பராஉளம் ஒடுங்கத் தூங்கிப் பரவிட உணரும் காலம்
புறா உறங்கினன் நான்என்று போதனாம்
எவன்புமானாய்ச்
சராசர குருவாம் அந்தத் தட்சிணாமூர்த்தி போற்றி.

சூரிய சந்திரர்களை ராகு மறைத்து இருள் உருவானதுபோல எப்பொழுதும் உள்ள ஆன்மாவை மாயை மறைத்து ஜீவன் எனும் பொய்ம்மையைத் தோற்றுவித்தது. ஜீவனே இந்திரியங்கள் மனம் எனப் பலவாறாய் விரிந்தது. விரிந்த மனம் தூக்கத்தில் ஒடுங்கி விழிக்கும் பொழுது மீண்டும் விரிந்து முன்பு நான் தூங்கினேன் என்கிறது. தூங்கியவனுக்கு விழித்தவுடன் தூக்கத்தை உணர்த்திய அந்த தூங்காப் பொருளே நான் எனப் போதித்த சராசர குருவாம் தென்முக மூர்த்திக்கு வணக்கம்.

கிரகண காலங்களில் சூரிய, சந்திரர்களை ராகு மறைப்பதால் இருள் உருவாகிறது. ராகு என்றாலே நிழல் கிரகம் என்றுதான் பொருள். உருவான நிழலே சூரிய சந்திரர்களை மறைக்கிறது. மறைபடும் பொழுது இருள் உருவாகிறது. அதுபோல பிரம்மத்தை மையமாகக் கொண்டு இயங்குகிற மாயையே ஏகமான பிரம்மத்தை மறைக்கிறது. ஒளி மறைந்து இருள் வருவதுபோல் ஒருமை மறைந்து இருமை உருவாகிறது. இருமை உருவாகக் காரணமான மாயையே தனது மாயா சக்தியால் பிரபஞ்சத்தையும், ஜீவனையும் தோற்றுவிக்கிறது. இருமை இல்லையேல் உலகப்படைப்பு எதுவும் இல்லை. ஜீவனே மனம், புத்தி, கரணங்கள் எனப்

பலவாறாக விரிகின்றது. ஜீவனே உலகப்பொருள்கள் அனைத்தையும் அறிந்து அனுபவிக்கிறது. புத்தி அறிகிறது. மனம் உடலோடு ஒட்டியிருக்கிறவரைதான் உலக உறவும் இருக்கும். மனம் உடலை விட்டு உள்ளதில் ஒடுங்குவதே தூக்கம். தூக்கத்தில் மனதிற்கு வெளியுலக தொடர்பு அறுபடுவதால் உலகம் இருப்பதில்லை. மனம் அடங்கும்பொழுது அந்த கரணங்களும் அடங்கியிருப்பதால் சுக துக்கங்களும் அனுபவம் ஆவதில்லை. மனமற்ற நிலையில் இயல்பாம் ஆனந்தம் வருகிறது. அதாவது இருமை அடங்கி ஒருமையில் திளைக்கிறது. ஆனால் வாசனை வசத்தால் மனம் மூலத்தில் நிலைத்திருக்க முடியாமல் வெளியே தள்ளப்படுகிறது. ஆத்மாவில் அடங்குவதே தூக்கம். ஆத்மாவிலிருந்து விடுபடுதலே விழிப்பு. விடுபட்ட மனம் மீண்டும் உடலைச் சேர்ந்து உலகை அறிகிறது. ஒடுங்கியிருந்தவன் நன்றாக உறங்கினேன் என்கிறான். தூங்கிக் கொண்டிருந்தவனுக்கு தூக்க சுகத்தையும் உணர்த்தி, வாசைன வசத்தால் அதிலேயே நிலைத்திருக்க முடியாததால் தட்டி எழுப்பியதும் அந்தத் தூங்காப் பொருளே. அதுவே நான், அதுவே தன்னிருப்பு என அறிவுருத்திய குருவாம் தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.

(தொடரும்)

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2025

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 13 | திங்கள் | காலை 5.03 | 14 | செவ்வாய் | அதிகாலை 3.56 |
| பிப்ரவரி | 11 | செவ்வாய் | மாலை 6.55 | 12 | புதன் | இரவு 7.22 |
| மார்ச் | 13 | வியாழன் | காலை 10.35 | 14 | வெள்ளி | மதியம் 12.23 |
| ஏப்ரல் | 12 | சனி | அதிகாலை 3.21 | 13 | ஞாயிறு | காலை 5.51 |

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

**மௌனிசாது**
**மொழிமாற்றம்: ராம் மோஹன்**

## 35. நானும் நீயும்

என்னுடைய ப்ரக்ஞை உணர்வு வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமாக அமைகிறது. தியானம் செய்யும் சமயங்களில் அடிக்கடி நான் பரம்பொருளுடன் ஐக்கியம் ஆகும் பேரின்ப உணர்வை அனுபவித்துள்ளேன். நான் தியான நிலையிலிருந்து சாதாரண வாழ்வு நிலைக்கு திரும்பும்போது இந்த ஐக்கிய உணர்வு இழக்கப்படுகிறது. இந்த குழப்பத்தின் காரணமாவது இதைக் குறித்து என் மனதில் எழும் ஐய உணர்வே என்பதை நான் அறிவேன். எனவே எனது அந்தராத்ம ஒளியை இதன்மீது படியச் செய்து அதில் எழும் ஆத்மிக அனுபவமாகிய உறுதியான அஸ்திவாரத்தை மெய்யுணர்வு என்ற அனுபவத்தின்மீது எழுப்ப முயற்சித்தேன். அதன்பின் இந்த மெய்யுணர்வு அனுபவங்களை, கூடியவரை மனத்தின் மொழியில் மாற்றம் செய்யும் தேவை எழுந்தது. மனம் என்பதே நிபந்தனைக்குட்பட்ட எல்லையில் உழல்வதுதான். வாழ்வின் பிரதிபலிப்பு அல்லவா? ஒப்புமைகளும், குறியீடுகளும் இந்த நோக்கத்திற்கும் பொருத்தமானவை. சில கருத்துக்களை வெளியிட இந்த அடிப்படை உண்மைகளைப் பயன்படுத்துகிறேன்.

என்னுடைய தியான யோகத்தில் முந்தைய அனுபவத்தின் அடிப்படையில் இந்த உவமானத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தனி மனிதர்களை ஒரு மரத்தின் இலைகட்கு ஒப்பிடலாம். அடிப்படை இந்த மரம்தான். இந்த மரத்தின் கணக்கற்ற இலைகளின்

*உயிரின் அடிப்படை. இலைகள் தோன்றி வளர்கின்றன. பட்டுப்போகின்றன. இறுதியில் இறந்து விடுகின்றன. ஆயினும் தனது பல்லாயிரம் இலைக் குழந்தைகளின் விதி முடிவைப் பற்றிக் மரம் கவலை கொள்வதில்லை. தனக்கு மிகவும் அன்பார்ந்த இலைதான் இது என்று அடையாளம் காட்டுவதில்லை. அவற்றின் வாழ்வு மிகவும் தற்காலிகமானது என்பதை மரம் அறியும். அதேசமயம் இந்த இலைகட்கு தமது அன்னையாகிய மரத்தின் விதி முடிவு பற்றி அறியுமா? அந்த ஒவ்வொரு இலைகளின் வாழ்நாட்களைக் காட்டிலும் பல மடங்கு அதிகமானது. இந்த மரத்தின் வாழ்நாள் என்று அவை அறியுமா?*

*தாய் மரத்துடன் அவை பிரியாமல் ஒன்றி இருக்கும் கால அளவை மட்டுமே இந்த இலைகளின் வாழ்நாள் முடிவிடப்படுகிறது. இந்த உண்மையை அந்த இலைகள் உணரா. அவை விருப்பப்படும் சமயத்தில் அவற்றால் தாய் மரத்தை விட்டு நீங்க இயலாது. அவை முற்றிலும் முதிரும்வரை அவை மரத்துடன் இணைபிரியாது இருக்க வேண்டிவரும். அவை முதிர்ச்சி பெற்று விட்டன என்ற நிலையில் அவை இலை என்னும் தோற்றத்தை இழக்க வேண்டி வரும்.*

*இலையின் கோணத்தில் இருந்து பார்த்தால் அதனுடைய வாழ்வு ஒரு முடிவுக்கு உட்பட்டது. அதனுடைய சாத்யக் கூறுகள் வரையறுக்கப்பட்டவை. அந்த இலைகளின் வரையறுக்குட்பட்ட வாழ்க்கையை மாற்ற முயல்வது பயனற்ற முயற்சி. தாய் மரத்தினை தொடர்ந்து நீடிக்கும் வாழ்க்கையைச் சார்ந்தே இலைகளின் வாழ்வு அமைந்து உள்ளது. (ஸ்டார்ச் மூலம் தாய் மரத்திற்கு உணவை சேகரிக்கும் வேலையை தவறின்றி செய்வதே. தாய் மரத்தின் வாழ்நாளை அதிகப்படுத்தி அதன்மூலம் இலைகள் அனைத்தின் வாழ்நாட்களை அதிகப்படுத்துவது ஒன்றே தனிப்பட்ட இலை மட்டுமே இலைகள் சமூகத்தின் வாழ்வு அதிகரிக்கும் வழி.)*

நம் தனிப்பட்ட மெய்யானது என்று நம்பிக் கொண்டு இருப்பது மிகவும் துயரமான ஒன்று. அதேபோன்று நாம் நம்மிடம் வைத்துள்ள அனைத்தும் நம்முடைய நிரந்தரமான சொத்து; நம்முடைய நிரந்தரமான ஒன்று என்பதும் நாம் மற்றவர்களது தேவைகளை ஒதுக்கிவிட்டு நாம் வாழ முடியும் என்பதும் இந்தத் துன்பியல் நாடகத்தின் பகுதிகளே. மரத்தின் இலைகள் போன்று நியமிக்கப்பட்ட வேளையில் நம்முடைய புறக்கூடு தளர்ந்து ஒடுங்கி அழியும். நிரந்தரமான ஆத்மா பரத்தால் ஈர்க்கப்பட்டு அதிலேயே ஒடுங்கும் உள்ளத்தில்தான் உண்மையான உயிர் உள்ளது.

என் மனதால் புரிந்து கொள்ளக் கூடிய இந்த மொழியில் சத்யத்தை உணர்த்தியபின் என் மனம் அமைதி அடைந்துவிட்டது. இங்ஙனம் உணரப்பட்ட ஐக்கியம் நம்மைக் கடந்து இருக்கும் ஆத்ம சாம்ராஜ்யத்தின் ஒருங்கிணைந்த தத்துவமாகும். தனித்தனியாகப் பிரிந்து இயங்குதல் என்பதன் பொய்ம்மை இப்போது மடிந்துவிட்டது.

உயர்ந்த வ்யக்திகளிடம் ஆணவத்தை நாம் காண்பதில்லை. இந்த ஆணவமற்ற தன்மை வெறும் உணர்ச்சி பூர்வமானதோ அன்றி வெறும் தத்துவமோ அல்ல. அவர்கட்கு தம் மூலம் எது என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். இயேசு கிறிஸ்து தம் எதிரிகளையும் காக்க வேண்டும் என்று பிரார்த்தித்த போதோ, அன்றி திருடர்களால் தாக்கப்பட்ட மகரிஷி, தமது மறுபுறத்தையும் தாக்கச் சொல்லி திருடர்களிடம் கூறியபோதோ அவர்கட்கு இயற்கையின் நியதிகள் தெரியும்.

அவர்தம் செயல்களில் எந்த பாசாங்குத் தன்மையும் இல்லை. தம்ஊடே அதிர்கின்ற அதே உயிர்த் துடிப்புதான் நம்மைத் தாக்குபவர்கள் உள்ளேயும் உள்ளது என்பதை அவர்கள் அறிவார்கள். ஒரே

ஒரு வித்தியாசம் என்னவெனில் தாக்குபவர், தாக்கப்படுபவர் இருவர் உள்ளேயும் ஒரே ஆத்மா உள்ளது என்பதை கிறிஸ்துவும், மகரிஷியும் அறிந்து இருந்தார்கள். அவர்களுக்கு தீங்கு இழைத்த யூதக் கொலைகாரர்களும், பகவானைத் தாக்கிய திருடர்களும் இந்தப் பேருண்மையை அறிந்து இருக்கவில்லை.

நாம் முன்பு கண்ட தாய்மரம் இலைகள் உவமானத்தில் இரண்டுக்கும் உள்ள ஒரே வேறுபாடு இலைகளுடைய நிரந்தரமற்ற தன்மையும், அவற்றின் மாறிக் கொண்டே இருக்கும் நிறமும்தான். உயிர்மையின் அடிப்படை விதியை அறிவதுகூட சற்று நேரத்திற்கேனும் நமது ப்ரக்ஞையை ஆத்மிக எல்லைக்குள் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கிறது. அனைத்திலும் ஒரே ஆன்மாவே ஊடுருவி உள்ளது என்பதை ஒரு கணமேனும் நாம் உணர்ந்தோமாயின் நாம் அந்தக் கணத்தில் பௌதிக உலகினின்று ஆன்மிக உலகிற்கு செலுத்தப்பட்டு வாழ்வோம்.

சிலசமயங்களில் நாம் நமது சத்குருவின் உபதேசங்களில் பொதிந்துள்ள இறைத் தன்மையை உணர்கிறோம். ஆனால் முக்கியமான விஷயங்களை வெகு சீக்கிரம் மறந்துவிடலாகிய நம் உளப்பாங்கு பகவானின் முக்கியமான உபதேசங்களை எளிதில் மறக்கச் செய்கிறது.

நான் செல்லும்பாதை மிக நீண்டது. நான் எனது இல்லத்திலிருந்து வெகு தூரத்தில் உள்ளேன்.

(தொடரும்)

# பகவானின் அணுக்கத் தொண்டர் டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு

## பகுதி ஒன்று

### தமிழில்: மா. முருகேசன்

*அருணாசல ரமணரின் அணுக்கத் தொண்டர்கள் அனைவரும், பகவான் ரமண மகரிஷியே தனது உயிர் மூச்செனத் தன் மண்ணுலக வாழ்வை அருந்தவ வாழ்வாய் அர்ப்பணித்திருக்கும் ரமண பக்தை டி.ஆர்.கனகம்மாளை நன்கறிந்துள்ளனர். அவரது அளவிடற்கரிய ஆழ்ந்த ரமண பக்தி, ரமண உபதேச அருண்மொழிகளில் பெற்றிருந்த நுண்ணிய ஞானம், பெற்றிருந்த அருணாசல உபதேச அருண்மொழியே தன் வாழ்வாக்கி கொண்டமை ஆகியவற்றை ரமண அணுக்கத் தொண்டர்கள் உளமாற போற்றி வருகின்றனர். அடியார்கள் அவரை போற்றுவதோடு மனநிறைவு அடைவதில்லை. அவரது முன்னிலையில் அவர்கள் அனுபவமாகிய ஆன்மிகத் தாக்கத்தையும், அவரது அளப்பரிய ஆன்மிக ஆற்றலையும், அந்த ஆற்றலைத் தன் வாழ்வாக்கியதையும் ரமண அடியார்கள் உள்ளாழ்ந்து போற்றி வருகின்றனர். அவரது ஆன்மிகப் பயணத்தில், அவரோடு அங்கிருந்து பயணித்த அடியார்கள், குறிப்பாக, தென் இந்திய கோவில்களுக்கு பல நாட்கள் ஆன்மிக பயணம் செல்லும்பொழுது அவர்கள் அனுபவமாகிய ஆன்மிக ஆற்றலை நுணுக்கமாய் எடுத்தியம்புகின்றனர். அவரது பேச்சிலும், எழுத்திலும் அவரது குறிப்பிடத்தக்க குணநலன்கள் மிளிர்ந்ததைவிட அவரது முன்னிலையில் அடியார்கள் பெற்ற உள்ளாழ்ந்த அமைதி எல்லையற்றது*



*T.R. கனகம்மாள்*

*என புகழ்கின்றனர். அந்த அமைதி அவர் உள்ளத்தில் பெற்றிருந்த அளப்பரிய எல்லையில்லாத அமைதி, மௌனத்திலிருந்து மணம் வீசியது. அவரது உள்ளாழ்ந்த அமைதி, இறைவனோடு தொடர்புடையது. ஆதலால், தெய்வீகத் தன்மை ஒளிர்வதை அடியார்கள் உணர்ந்திருந்தனர்.*

*உண்மையில், வெளியுலக நடைமுறையில் ரமண பக்தை கனகம்மாளின் செயல்பாடுகள் மிகச் சாதாரணமானதாய் இருந்தன. அவர் பேசுகின்றபோது, மற்றவர்களைப் போன்ற பொதுவான அன்றாட விஷயங்களைப் பேசினார். ரமணரின் கருணையை போற்றி தொழுதேத்தும் எளிய ரமண பக்தையாகவே தன்னை பார்த்தார்; மற்றவர்களிடம் அவர் தன்னைப் பற்றி பேசி வெளிப்படுத்தியதில்லை. எவ்வாறாயினும், அவரது நற்பண்புகளை மற்றவர்கள் புகழ்வது அவரது பெற்றோருக்கு ஆச்சரியத்தை அளிக்காது; ஏனென்றால், அவர்கள் தங்கள் மகளின் நல்லாற்றலை சிறு குழந்தையாய் இருந்தபொழுது முதலே அறிந்திருந்தனர்.*

குழந்தைப் பருவத்திலிருந்தே வயதுக்கு மிஞ்சிய அறிவுடனும், சமயத்தின்மீது ஆர்வமும் ஆன்மிகத்தில் நாட்டமும் கொண்டிருந்த தங்கள் குழந்தையின் வயதுள்ள மழலைகள் பொதுவாய் வெளிப்படுத்தும் குழந்தைத் தனத்தை தவிர்ப்பதையும் பெற்றோர்கள் அறிந்தே இருந்தார்கள்.

குடும்பத்தில் ஒன்பதாவதாக பிறக்கும் குழந்தை வாழ்வில் மிகச் சிறந்த பெருமையை அடையும் என்பது தமிழ்மொழியில் உள்ள ஒரு பழமொழி. ஸ்ரீ டி. ரங்கநாத ஐயர் மற்றும் ஸ்ரீமதி ராதாம்பாள் தம்பதியினர் பெற்றெடுத்த பதின்மூன்று குழந்தைகளில் கனகாம்பாள் ஒன்பதாவது குழந்தை. தமிழ் பிராமண குடும்பத்து சம்பிரதாய பழக்கங்கள், குறிப்பாக சமய ஈடுபாட்டிற்கு உறுதுணையாய் இருந்திருக்கும்.

கனகம்மாளின் வாக்கினிலேயே அவர் வாழ்க்கையை காண்போம்:

> *"காஞ்சி சங்கராச்சாரியார் மீது அதீத பற்றும் பக்தியும் கொண்டுள்ள தமிழ் பிராமண குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். குடும்பச் சூழலையும் உலக நடைமுறை வாழ்வியலையும் துறந்து சிறு பருவத்திலேயே ஸ்ரீ ரமணாஸ்ரமம் வந்து, பகவான் ரமணரின் ஆன்மிக நெறிமுறைகளை நான் வாழ்வியல் ஆக்கிக்கொண்டபொழுது, அதை என் குடும்பத்தினரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதை அவர்கள் விரும்பவில்லை என்றாலும் அவர்களால் என்னை ஆன்மிக வாழ்விலிருந்து பின்வாங்கச் செய்ய முடியவில்லை; ஏனென்றால், எனது தனியாத ஆன்மிகத் தேடல் வேட்கையை நன்கறிந்திருந்த என் தந்தையின் ஆதரவு எனக்கிருந்தது." ('This and That', The Mounain Path, Jayanti, 1989, P.143)*

*1918ல் கனகம்மாளின் தந்தை, ஆந்திரபிரதேசத்தில் வேறொருவருடன் சேர்ந்து தொழில் தொடங்கிய*

படியால் குடும்பத்தை இதற்கு முன்பே அழைத்துச் சென்றிருந்தார். தமிழ் அவர்களுடைய தாய்மொழியாக இருந்தாலும் குழந்தைகள் தெலுங்கு மொழியை தங்கள் பள்ளிக்கூடத்தில் கற்றனர். கனகம்மாளின் பெரியப்பா ராமகிருஷ்ண ஐயர், திருவண்ணாமலையில் மாவட்ட முன்சீப் ஆக தொடர்ந்து பணியாற்றி வந்தார். மேலும், பகவான் மலையில் வாழ்ந்த காலத்திலேயே தொடங்கி பகவானை தரிசித்து வருவதை இடையறாத வழக்கமாக்கிக் கொண்டார்.

*"என் பெரியப்பா ராமகிருஷ்ண ஐயர், பகவானை வந்தடைந்த தொடக்க கால பக்தர்களில் ஒருவராவார். பகவான் விருபாக்ஷ குகையில் இருந்த காலத்திலேயே அவர் பகவானிடம் முழுதும் சரணடைந்துவிட்டார். அவருடைய தம்பியாகிய ரங்கநாத ஐயர் என் தந்தையாவார். என் பெரியப்பாவும் என் தந்தையும் செங்கம் வட்டத்தில் உள்ள படிஅக்ரஹாரம் என்ற ஊரில் பிறந்தனர். படிஅக்ரஹாரம் என்ற ஊர் திருவண்ணாமலையின் மேற்குத் திசையில் இருபது மைல்கல் தொலைவில் உள்ளது. அவர்கள் இருவரும் உரிய வயது வந்தவுடன் திருவண்ணாமலைக்கு இடம்பெயர்ந்து வந்து தங்கிவிட்டனர். என் தந்தை, தன் அண்ணனை அடிக்கடி சென்று பார்த்துவந்தார்; இருவரும் சேர்ந்து ரமணாஸ்ரமம் சென்று பகவானை தரிசித்து வந்தனர். பகவான்மீது எனது மூத்தோர்கள் கொண்டிருந்த பக்தியினால்தான் நான் பகவானின் அணுக்கத் தொண்டர்கள் குழாத்தில் ஒருவராக பகவானிடம் வந்து சரணமடைந்தேன்." (Cherished Memories T.R.Kanakammal, 2002., P.46)*

*"திருவண்ணாமலையில் சிறுசிறு சட்ட பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் முன்சீப்பாக இருந்ததால் ராமகிருஷ்ண ஐயர் நல்ல வசதி வாய்ப்புகள் நிறைந்தவராக இருந்தார்; மற்றும் தன் குடும்ப உறவினர்களுக்கும் விரிவாக்கப்பட்ட தன் குடும்பமான ரமணாஸ்ரமத்திற்கும் நற்றுணையாய் திகழ்ந்தார்.*

*எந்த சூழ்நிலையிலும், ரமணாஸ்ரம நிர்வாகத்தினர் நேர்மையான, உடனடியான பெருந்தன்மையான உதவிக்கு என் பெரியப்பாவை சார்ந்திருந்தனர். ஒருசமயம், நிர்வாகியான சின்னஸ்வாமி, ஆஸ்ரம கோவிலில் எப்பொழுதும் தொடர்ந்து பூஜை செய்யும் அர்ச்சகராகிய வேத விற்பன்னர் அன்று வரவில்லை என பெரியப்பாவிற்கு செய்தி அனுப்பினார். உடனடியாக, தன் வீட்டில் சமையல் செய்துவந்த வேதம் நன்கறிந்தவரை என் பெரியப்பா அனுப்பிவைத்து ஆஸ்ரம கோவிலில் உரிய நேரத்தில் பூஜை நடைபெறச் செய்தார். தொடக்கக் காலத்தில், ஆஸ்ரமம் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. ஆஸ்ரமத்தில் பிரச்சினைகள் எழுகின்ற ஒவ்வொரு முறையும் அச்சூழலை பெரியப்பா தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு உரிய தீர்வு காண முயற்சித்தார். ஜூன் 1924-இல், திருடர்கள் ஆஸ்ரமத்தை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தபொழுது, நகரத்திலிருந்த என் பெரியப்பாவைத்தான் குஞ்சுஸ்வாமி ஆஸ்ரமத்திற்கு அழைத்து வந்தார். ஆஸ்ரம நிர்வாகத்தினருக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு துணை நின்று என பெரியப்பா உதவி புரிந்தார். எப்பொழுதெல்லாம் அவசியம் ஏற்பட்டதோ அப்பொழுதெல்லாம் நிர்வாக அதிகாரி சின்னஸ்வாமி அவருக்கு செய்தி அனுப்புவார்; என் பெரியப்பா அவரை ஒருபொழுதும் ஏமாற்றமடையச் செய்யவில்லை." (மேலது., பக்.48)*

ராமகிருஷ்ண ஐயரின் மனைவியும் கனகம்மாளின் பெரியம்மாவான பொன்னம்மாள் அவருக்கு சிறந்த தூண்டுகோளாகவும் ஊக்குவிப்பவராகவும் இருந்தார். சாதாரண குடும்ப வாழ்வுக்கு மாற்றாக அந்த இளம் பெண்ணின் ஆன்மிக வாழ்வுக்கு முன்மாதிரியாய் அவருடைய பெரியம்மா திகழ்ந்தார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் தென்இந்திய பெண்களின்மீது அதீத தாக்கத்தை ஏற்படுத்திவந்த சமுதாய எதிர்பார்ப்புகளையும், எதிர்ப்புக்களையும்

புறந்தள்ளிவிட்டு தன்னைப் போன்றே ஆன்மிக வாழ்வை ஆராதிக்கும் அளவுக்கு கடவுளின்மீது காந்த ஈர்ப்பினை பெரியம்மாவிடம் அவர் கண்டார். அவருடைய பெரியம்மா கடவுளிடம் கொண்டிருந்த உளமார்ந்த பக்தி, கனகம்மாளுக்கு இல்லறம் தவிர்த்துவிட்டு, ஆன்மிகமே, பகவான் ரமணர் வழியே, தன் வாழ்வாய் வரித்துக்கொள்ள மன வலிமையையும் உறுதிபாட்டினையும் நல்கியது.

*"என் பெரியம்மா பொன்னம்மாள் ஒரு ஒப்புயர்வில்லா பெண்மணி. அவருக்கு உலகின் மீது பற்றெதுவுமில்லை. காவ்ய கண்ட கணபதி முனியிடம் தீக்ஷை பெற்று, எப்பொழுதும் கடவுளை துதிப்பதிலும் பூஜை செய்வதிலும் ஈடுபட்டிருந்தார். அவர் இல்லற வாழ்வில் சிறிதும் கவனம் செலுத்தவில்லை. இருப்பினும் குடும்ப வாழ்வு நேர்த்தியாய் சென்று கொண்டிருந்தது. குடும்பத்தினரைப் பார்க்க வருபவரின் எண்ணிக்கை குறையவில்லை. அவர் முகமலர்ச்சியுடன் கூடிய அழகிய பெண்மணியாவார். அவர் சக்தியாகிய அம்பாளை வணங்கி வந்தார். தான், அவருடைய வெறும் பாதங்கள் பூமியைத் (அவர் அம்பாள்மீது கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியினால்) தொடும்பொழுது தன் உடம்பில் ஒருவித மின்சார சக்தி பாய்வதை உணர்வதாகக் கூறினார். எனவே, எப்பொழுதும் மரத்தினால் செய்யப்பட்ட பாத ரக்ஷையினை (காலணியாகிய செருப்பு) அணிந்திருந்தார். உறவினர்களோ பார்வையாளர்களோ வீட்டிற்கு வந்தால், உடனடியாக அவர் காலணிகளை அணிந்துகொண்டு தன் அறைக்குள் சென்று விடுவாள். அவர் பார்வையாளர்களை வரவேற்றதுமில்லை; பார்க்க வருவதை எதிர்த்ததும் இல்லை. விருந்தினர்களை உபசரிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆனால், இதைப்பற்றி, என் பெரியப்பா ஒருபொழுதும் குறை கூறியதில்லை. மாறாக, பார்க்க வருபவர்களை உபசரிக்கும் பொறுப்பினை அவரே ஏற்றக்கொண்டார். ஒரு பிராமண இளைஞன் அவர்களுக்கு சமைக்கும் பொறுப்பை கவனித்துக் கொண்டார்; என் பெரியப்பா மற்ற குடும்ப வேலைகளை கவனித்துக் கொண்டார்." (மேலது, பக். 47)*

*சிறுமியாய் இருந்தபொழுது கனகம்மாள், தன் தந்தையும், பெரியப்பாவும் பகவானின் முன்னிலையில் தாங்கள் பெற்ற அனுபவத்தை விவரிக்க கலந்துரையாடுவதை கேட்டிருக்கின்றாள்; அவர் பகவானை நேரடியாக பார்த்ததில்லை; ஆனால் அத்தருணத்திற்காக பொறுமையுடன் காத்திருந்தார். இறுதியில் 1930-இல் அந்நல்வாய்ப்பும் கிடைத்தது.*

> *“என் பெற்றோர், என் பெரியப்பா வீட்டிற்கு என்னை அழைத்துச் செல்லும் ஒவ்வொரு முறையும், ராமகிருஷ்ண ஐயர், ரமணாஸ்ரமம் சென்று பகவானை நாங்கள் தரிசிக்க ஏற்பாடுகளை செய்துவிடுவார். ஒரு சமயம், அவருக்கு வேறொரு வேலை இருந்தபடியால் என்னை ஆஸ்ரமத்துக்கு அவரால் அழைத்துச் செல்ல இயலவில்லை. எனவே, எங்களது உறவினர் ஒருவரோடு என்னை அவர் அனுப்பி வைத்தார். அப்பொழுது எனக்கு எட்டு வயதிருக்கும். நாங்கள் ஆஸ்ரமத்தை அடைந்தபொழுது, ஒரு ஓலை குடிசையின் முன்னால் இருந்த சிறு மேடையில் பகவான் அமர்ந்திருப்பதைக் கண்டோம். சாஸ்டாங்கமாக வீழ்ந்து பகவானைத் தொழுதெழுந்து அவரை அமைதியாய் கவனித்தும் கொண்டிருந்தேன். பகவான், என்னை அழைத்துச் சென்றவரிடம் விவரங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்; அவரும் பதிலுரைத்தார். அவர்களுடைய உரையாடல் விவரங்கள் இப்பொழுது எனக்கு நினைவில்லை. ஆனால், பகவான் என் மீது வீசிய ஆற்றுப்படுத்தும் காந்தப்பார்வையாகிய கண்ணோக்கம் பசுமையாய் என் நினைவில் உள்ளது. கொவ்வை செவ்வாயில் மலர்ந்த குமிண்சிரிப்பு, உள்ளத்தை கொள்ளை கொள்ளும் புன்முறுவல் நினைவில் என்றும் பசுமையாய் நிலைத்துள்ளது.” (மேலது பக்.53)*

*முதல் தரிசனத்திலேயே பகவானால் ஆட்கொள்ளப்பட்டுவிட்டாலும் அவரது சின்னஞ்சிறு வயது காரணமாக, அவர் விரும்புகின்றபொழுதெல்லாம் பகவானை தரிசிக்க வர இயலவில்லை. இவ்வாறாக,*

*அடுத்த தரிசனத்திற்காக மூன்றாண்டுகள் அவர் காத்திருக்க நேர்ந்தது. இடைப்பட்ட காலத்தில், அவர் ராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் விவேகானந்தர் ஆகியோரின் உபதேச அருண்மொழிகளை கற்றறிந்தார்; தன் அறையின் உள்ளேயே அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். ('Introducing', 'The Mountain Path' April 1983, pp.118 -119)*

*"நான் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது, ராமகிருஷ்ண பரமஹம்சர் பற்றிய பாடம் ஒன்றிருந்தது; அது மனதில் ஆழ பதிந்து தாக்கத்தை ஏற்படுத்தியது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கதைகளால் ஊக்குவிக்கப்பட்டதை உணர்ந்தேன்; உலகப் பற்றுக்களிலிருந்து விடுதலை பெற்ற வாழ்வின் மீது வேட்கையை என்னுள் தோன்றுவித்து வளர்த்தெடுப்பதைக் கண்டேன். ஆன்மிகத் தேடலில் என்னை அர்ப்பணித்துக்கொள்ள நான் விரும்பினேன்; நாட்கள் செல்லச்செல்ல இந்த ஆன்மிக ஆர்வம் வலிமைப்பெற்று என்னை முற்றிலும் ஆட்கொண்டது." (Cherished Memories, p.53)*

### திருமணம் பற்றிய வினா

ஆன்மிக வாழ்வின் மீது தங்கள் மகள் கொண்டிருந்த தணியாத ஆர்வத்தை தொடக்கத்திலிருந்தே அவரது பெற்றோர் அறிந்திருந்தனர்; கனகம்மாள் பதினோரு வயது அடைந்தபொழுது, அவரது தாயும் தந்தையும் திருமணத்திற்கு மகளின் தயக்கத்தையும் ஆன்மிகத்தில் உறுதிப்பாட்டையும் கண்டு மனக்கவலை கொண்டனர். ஆன்மிக நாட்டமிகுதியால் மகள் கடவுளை நாடி வீட்டை விட்டு சென்று விடுவாரோ என பயந்து, மகளை கவனித்துக் கொள்வதற்காக அருகிலேயே உறங்கினர். ஒரு நாள், பகல் முழுதும் தொழுதேத்தலும் தியானமும் செய்துவிட்டு, இரவு தூங்கியவுடன் கனகம்மாள் தான் கனவும் காட்சியும் கலந்த நிலையில் இருப்பதைக் கண்டார். அவர் திடீரென்று விழித்திருந்தபொழுது தன்முன் ஸ்வாமி விவேகானந்தர் நின்றுகொண்டு

*தன் மீது (கனகம்மாள் மீது) முற்றிலும் விபூதி தூவிக் கொண்டிருப்பதை நிதர்சனமாய்க் கண்டார். அறை முழுதும் விபூதி நறுமணம் நிறைந்திருந்தது; அவரது தந்தை விழித்தெழுந்து ஆச்சரியத்தில், "எங்கிருந்து எப்படி இந்த விபூதி நறுமணம் திடீரென்று பரவுகின்றது?" எனக் கேட்டார்.*

*இந்த நிகழ்வுக்குப் பின் சில நாட்களிலேயே அருகாமையில் வசித்து வந்த பெண்மணி ஒருவரின் கணவர் மரணம் அடைந்தார். குடும்ப வாழ்வினால் ஏற்படும் துயரத்தையும் அவலத்தையும் கண்ணுற்ற கனகம்மாள் திருமணமே செய்து கொள்ளக் கூடாது என முடிவெடுத்தார். ஆனால், அவரது பெற்றோர், இந்நாட்களிலேயே வேறு சில திட்டங்கள் செய்து வைத்திருந்தனர்.*

*(நன்றி: சரணாகதி இதழ்)*

*(தொடரும்)*

**ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை**

**தகவல் மற்றும் தொடர்புக்கு**

For Website: https://www.gururamana.org

For Accommodation: https://stay.gururamana.org

For Parayana: https://parayana.gururamana.org

For Search: https://search.gururamana.org



# திரும்பிய கந்தன்

## தீபா மகேஷ்

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி, திருவண்ணாமலையில் உள்ள விரூபாக்ஷ குகையில் பதினாறு ஆண்டுகள் தங்கியிருந்த காலத்தில், பல யோகிகளும், தவ சிரேஷ்டர்களும் அவரை நாடிவந்து அவர் அருட் தேனைப் பருகினர்.

பகவானின், சுவானுபூதி மணம் உலகெல்லாம் மணக்க, அந்த அருணாசலேஸ்வரரே ஒரு யோகி வடிவில் வந்து, பகவானின் நிலையைப் போற்றி, "ரமண ஸ்துதி பஞ்சகம்" இயற்றினார் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே.

அதில் உள்ள 'பொன்னொளிர் பத்து' பாடலில்,

பொன்னொளிர் வடிவினானே பூரண வதனத்தானே
தன்னரும் சுவாநுபூதி தரையெல்லாம் மணக்க ஏழை
உன்னரும் புகழைக் கேட்டு இவ் உலகெல்லாம் தேடி வந்தேன்
என்னருள் இறையே ஞான ரமணனே ஜோதிக் குன்றே

என்று பாடுகிறார்.

அப்படி விருபாக்ஷி குகையில், பகவானின் அருளில் திளைத்திருந்த அமிர்தானந்த யதீந்திரர், "யாரோ இந்த அருணாசல ரமணன்? சிவனோ, விஷ்ணுவோ, குஹனோ, மற்றெந்த தேவனோ, தெரியவில்லையே" என்று பொருள் படும்படி, மலையாளத்தில் ஒரு பாடல் எழுதி, பகவான் வெளியே சென்றிருந்த சமயம், அவர் இருக்கையின் மீது வைத்து விட்டார். திரும்பி வந்தமர்ந்த பகவான், அதைப் படித்து விட்டு, அந்தக் காகிதத்தின் பின்னால், அவருடைய கேள்விக்கு பதிலாக "விஷ்ணு முதலான அனைத்து ஜீவர்களுடைய

ஹ்ருதயம் ஆகிய குகையில் பிரகாசிக்கும் பரமாத்ம சொரூபமே அருணாசல ரமணன் ஆகும். அந்த அருணாசல ரமணனை, பக்தியால் உள்ளம் உருகி, இதய குகையை அடைந்து, ஞானமாகிய கண்ணால் நோக்கினால் அறிய முடியும்" என்று எழுதினார். இந்த பாடல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, பகவானின் சந்நிதியில் தினம் பாடப்படுகிறது.

*அரியாதி இதர ஜீவரது அக வாரிஜ குகையில்*
*அறிவாய் ரமி பரமாத்துமன் அருணாசல ரமணன்*
*பரிவால் உளம் உருகா நல பரனார்ந்திடு குகையார்ந்து*
*அறிவாம் விழி திறவாய் நிஜம் அறிவாய் அது வெளியாம்.*

பகவான் எங்கும் நிறைந்த ஆத்ம சொரூபம் என்றாலும், அவர் அடியவர்களாகிய நாம், நம் பாவத்திற்கும், பூர்வ ஜென்ம வாசனைகளுக்கும் ஏற்ப, அவரை, சிவனாகவோ, முருகப் பெருமானாகவோ, ஸ்ரீராமராகவோ கருதி வணங்குகிறோம்.

பகவானின் தலைசிறந்த அடியார்களுள் ஒருவராகிய, முருகனார், பகவானை சிவபெருமானாக பாவித்து, (திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகர் போல) பகவான் மீது ஸ்ரீ ரமண சந்நிதிமுறை என்ற நூலை இயற்றினார். மற்றொரு சிறந்த அடியாரான டி.கே. சுந்தரேச ஐயர் அவர்களுக்கு, அவரின் இஷ்ட தெய்வமான ஸ்ரீ ராமராக, பட்டாபிஷேக மூர்த்தியாக, பகவான் காட்சி அளித்தார்.

பகவானுக்கு, "ஸ்ரீ ரமண மகரிஷி" என்று பெயர் அளித்தவர், ஸ்ரீ காவ்ய கண்ட கணபதி முனி. சிறந்த தவ சிரேஷ்டரும், யோகீஸ்வரருமான அவர், ஒரு நாள் அதிகாலை, பகவான் முன்பு தனது சீடர்களுடன் அமர்ந்திருந்தார். அப்போது, வானிலிருந்து ஒரு ஒளிக்கீற்று, பகவானது நெற்றியைத் ஆறு முறைத் தொட்டுச் சென்றதை, அவர் கண்டார். அந்த தரிசனம், பகவான் ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமியே என்ற

*உள்ளுணர்வை அவருக்குள் தோற்றுவித்தது. அந்த உள்ளுணர்வின் வெளிப்பாடாக, மகாகவியான அவர், பகவானை ஸ்கந்தனாக பாவித்து, பல ஸ்லோகங்களை இயற்றினார். அவை "ஸ்ரீ ரமண சத்வாரிம்ஸத்" என்று தொகுக்கப்பட்டு பகவான் சந்நிதியில் தினமும் காலையில் பாராயணம் செய்யப்படுகிறது.*

*இப்படி, மலை போன்ற பெரிய அடியார்கள் மட்டுமல்லாது, நம்மைப் போன்ற பக்தர்களும், பகவானைக் முருகக் கடவுளாக பாவிப்பது உண்டு.*

*மதுரை திருப்புகழ் அலமேலு அம்மாளுக்கு சுப்ரமணியரே கண்கண்ட தெய்வம். அவரே தனக்குக் குருவாக வரவேண்டும் என்றும், வேறு யாரையும் குருவாக ஏற்பதில்லை என்றும் சங்கல்பித்திருந்தார். பகவானைத் தரிசிக்க அவர் தந்தையார் அழைத்த போது, வர மனமின்றி மறுத்து விட்டார். அன்று இரவு, அலமேலு அம்மாளின் கனவில், பகவான் தரிசனம் தந்தார். பின் பகவான் உருவம் மறைந்து, சுப்ரமணிய சுவாமியின் தரிசனம் கண்டார். மறுநாள், பகவானைக் காண ஆசிரமம் வந்த போதும், இதே போன்ற தரிசனம் அவருக்குக் கிடைத்தது. பின், பகவானை சுப்ரமணிய சுவாமியாகவே உணர்ந்து பூரண சரணாகதி அடைந்தார்.*

*அக்ஷரமணமாலைப் பாராயணத்தின் போது,*

*திரும்பி யகந்தனை தினம் அகக்கண் காண்*
*தெரியும் என்றனை என் அருணாசலா*

*என்று மற்றவர்கள் பாடும்போது, அவர் மட்டும் 'திரும்பி யகந்தனை' என்று பாடுவதற்குப் பதிலாக, "திரும்பிய கந்தனை" என்று பாடுவார்கள்.*

*சுப்ரமணிய ரமணனிடம் அவருக்கு உள்ள ஏகாக்ர பக்திக்கு அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்.*

*பகவான் விரூபாக்ஷி குகையில் இருந்த சமயம், மற்றொரு பக்தரான கோ. வே. ராமச்சந்திர ஐயர், பகவானை ரமண முருகனாக உணர்ந்து,*

*“வேலெங்கே கோலஞ்சேர் வெற்பெங்கே, அன்னைதரும்*
*பாலெங்கே யீராறு பாகெங்கே நீலெங்கும்*
*ஏய்க்கும் கலாபமயி லெங்கே யுரைரமண*
*தாய்க்குக்கி வாழளவில் தான்.”*

*என்று கேள்வி எழுப்பினார்.*

*அதற்குப் பதிலாக பகவான்,*

*“வேலுண்டே சோதிகுண வெற்புண்டே அன்னையருள்*
*பாலுண்டே பன்னிரெண்டு பாகுண்டே நீலுண்டே*
*ஏய்க்குமன மாமயிலுண் டேயுலகிலே ரமணன்*
*தாய்க்குக்கி வாழளவில் தான்.”*

*என்று பாடினார்.*

*1912ஆம் வருடம், விநாயக சதுர்த்தியின் போது ஒரு பக்தர், புது மண் பிள்ளையாரை கொண்டு வந்து விரூபாக்ஷியில் உள்ள மாடத்தில் வைத்து விட்டு சென்றார். அப்போது ஈசுவர ஸ்வாமி என்று பக்தர் அந்த பிள்ளையாரின் மேல் ஒரு பாடல் எழுதித் தரவேண்டும் என்று பகவானைப் பிரார்த்தித்தார்.*

*பகவானும் கீழ்கண்ட வெண்பா பாடலை எழுதினார்.*

*“பிள்ளையாப் பெற்றவனைப் பிச்சாண்டி யாக்கியெங்கும்*
*பிள்ளையாப் பேழ்வயிற்றைப் பேணினீர் பிள்ளையான்*
*கன்னெஞ்சோ மாடத்துப் பிள்ளையாரே கண்பாரும்*
*பின் வந்தான் தன்னை நீர் பெற்று.”*

*பகவான் ரமண முருகன் என்பதற்கு இதை விடவும் சான்று வேண்டுமோ?*

# ஆதிசங்கரரின் பக்தி வேதாந்தம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

## *அத்தியாயம் 1*

### *ஆதிசங்கரரின் அவதாரம்*

*கேரள மாநிலத்தில் உள்ள காலடி, பூர்ணா நதிக்கரையில் அமைந்துள்ள ஓர் எழில் மிகு கிராமம். அங்கு ஆசார அநுஷ்டானங்களை செவ்வனே பின்பற்றி வந்த சிவகுரு ஆர்யாம்பாள் தம்பதியினர், சிவபக்தியையே செல்வமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். பல நாட்கள் புத்திரப்பேறு இல்லாத அவர்கள் அருகிலுள்ள திருச்சூரில் அமைந்துள்ள வடக்கநாதரை கடும் நோன்புகள் பல நோற்றுப் பிரார்த்திக்கின்றனர். சிவகுருவின் கனவில் ஒருநாள் பிறைசூடிய பெம்மான் தோன்றி, 'ஞானமும் குணமும் கொண்ட குறைந்த ஆயுளுடைய குழந்தை வேண்டுமா, அல்லது நீண்ட ஆயுளுடன் கூடிய சாமானிய அறிவு படைத்த பிள்ளை வேண்டுமா?' என்று வினவ, பரம பக்தரும் விவேகியுமான சிவகுரு, ஞானியான ஒரு குழந்தையையே வரமாக வேண்டுகிறார். நம் தவப்பயனால் ஆதிசங்கர் சிவகுரு ஆர்யாம்பாள் ஆகியோரின் மகனாகப் பிறக்கிறார்.*

*இவர் பிறந்த திதி வைகாசி பஞ்சமி. அப்பொழுது நான்கு கிரகங்கள் உச்சியில் இருந்ததாம். இந்த அமைப்பில் பிறக்கும் குழந்தை ஒப்பற்ற ஞானியாவான் என்று ஜ்யோதிஷ விற்பன்னர்கள் கணித்தனர். இவர் பிறந்த வேளையில் சிவகுரு ஶ்ரீருத்ர பாராயணம் செய்து கொண்டிருந்தாராம். அப்பொழுது அதன் 7ஆம் அநுவாகத்தில் உள்ள "நம: சங்கராய ச மயஸ்கராய ச" என்னும் நாமத்தை உச்சரிக்கையில் பிறந்ததால் அவருக்கு சங்கரன் என்று பெயர் சூட்டினாராம்.*

அத்வைத குரு பரம்பரைக்கு மிக முக்கிய சித்தாந்த ஸ்தாபகர் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரே ஆவார். இந்த குரு பரம்பரை, சாக்ஷாத் பரமேசுவரனிடமிருந்தே ஆரம்பித்தது என்பது நமது மரபு. "சதாசிவனிடமிருந்து ஆரம்பித்து ஆதிசங்கர பகவத்பாதரை நடுமத்தியமாகக் கொண்டு இன்றைய நம்முடைய ஆசாரியர்கள் வரை நீண்டு பரவி வரும் குரு பரம்பரைக்கு நமஸ்காரங்கள்" என்பது ஆஸ்திகப் பெருமக்களின் தினசரிப் பிரார்த்தனை

சதாசிவ சமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் ।
ஆஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் ॥

## வேதம் கண்ட அத்வைதம்

இந்த அத்வைத சித்தாந்தம் வேத காலத்திலிருந்தே விரவி வந்த ஒரு ஆழ்ந்த ஞான விசாரம்.

பரம்பொருளை வேத புருஷன், இந்திரன், அக்னி, யமன், சூர்யன், வாயு, எனப் பல வடிவிலும் வணங்கினான். ஆனால் அவை அனைத்தும் ஒன்றே என்பதைப் பல இடங்களிலும் வேதம் வலியுருத்துகிறது.

பல பெயர்களில் வணங்கப்பட்டாலும் ஆந்த ஒப்பற்ற பலம் வாய்ந்த வடிவம் ஒன்றுதான் (ருக் 8.1.27) என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறது ருக் வேதத்தின் 8ஆம் மண்டலம். அதுமட்டுமல்ல அந்த ஒன்றையே ஆன்றோர் பலவிதமாக அழைத்தனர். என்றும் பலவடிவ வழிபாட்டினை வேதம் சுட்டிக் காட்டுகிறது. ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி (ருக் 1.164.46) என்னும் இந்த வரிகள் பிரசித்தமானவை. ரிக் வேத 1ஆம் மண்டலக் கருத்தை மறுபடியும் அந்த ஒன்றே எல்லா தெய்வமாக பிரகாசிக்கிறது (ஏகம் வா இதம் வி பபூவ சர்வம்ருக் 8.58.2) என்ற வரிகளில் வேதம் 8ஆம் மண்டலத்தில் அழுத்தம் கொடுக்கிறது. இதையே இன்னும் சற்று விரிவாக, ஆக்னியும், ஆதித்தியனும், வாயுவும், சந்திரனும், ஒளியும், நீரும்,

*பிரஜாபதியும், பிரம்மமும் அந்த ஒன்றே என்று யஜுர் வேதம் விளக்குகிறது. (யஜுர் 32.1)*

*அப்படியென்றால் ஜீவராசிகள் எப்படி வந்தன. அவைகளுக்கும் அந்த பிரம்மத்துக்கும் என்ன தொடர்பு. சற்று நவீன பாணியில் லேசான நகைச் சுவையுடன் விளக்குகிறது வேதம்*

*அந்தப் பிரம்மம் ஒன்றே, ஆணாகவும் பெண்ணாகவும்; இளைஞனாகவும் குமரியாகவும்; இதோ இங்கு கோலூன்றித் தடுமாறி நடக்கும் முதியவராகவும், அனைத்துமாகி அனைத்திலும் அமைகிறது.(அதர்வண வேதம் 10.8.27)*

*த்வம் ஸ்த்ரீ த்வம் புமான் அஸி*
*த்வம் குமார உத குமாரீ*
*த்வம் ஜீர்ணோ தண்டேன வம்சஸி*
*த்வம் ஜாதோ பவசி விஸ்வதோமுக:*

*இங்கு நான்கு முறை வரும் த்வம் (நீ) என்பது ஒருமைச் சொல். 'நீங்கள்' இல்லை. வெறும் 'நீ'. இறைவனிடம் உரிமையுடன் பேசும் பாவத்தில் அமைந்துள்ளது. பிற்காலத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பரப்பிய அன்பு மதத்தில் இந்த ஒருமைச் சொல்லாடலை அடிக்கடி பார்க்கிறோம். இந்த பக்தி வேதாந்த சிந்தனை வேத காலத்திலேயே தோன்றியது என்பதை இந்த வேத மந்திரம் உணர்த்துகிறது.*

*இந்த ஒன்றே எல்லாம்; எல்லாமும் ஒன்றே என்னும் தத்துவம் மேல் நாட்டு சிந்தனையாளர்களை சிந்திக்க வைத்தது. அவர்கள் ஒரே கடவுள் (மோனோதீயிசம்) அல்லது பல கடவுள்கள் (பாலிதீயிசம்) என்னும் இரண்டு கட்டமைப்புகளுக்குட்பட்டு இயங்கி வந்தனர். ஆனால் பாரத நாட்டு தத்துவமான ஒன்றில் பலவாக, பலவும் ஒன்றகவும் இருக்கும் அந்த பிரம்மம் அவர்களை வியக்க வைத்தது; சிந்திக்க வைத்தது. மேக்ஸ் முல்லர் இதை விளக்க ஒரு புது*

சொல்லாடலைப் பயன் படுத்தினார் (ஹினோதீயிசம்). இதன் முழு விளக்கத்தை அவர் ஆராயவில்லை என்றாலும் இந்திய தத்துவ சிந்தனை மதக் கோட்பாடுகளுக்குஅப்பால் விரவி விண்ணில் பறக்கும் ஓர் அற்புதச் சிந்தாந்தம் என்பதை உலகம் உணர்ந்து வியக்க ஆரம்பித்து.

### உபநிஷதம் கண்ட அத்வைதம்

இந்த வேத மரபைப் பின்னர் வந்த உபநிஷதங்கள், விரிவாக்கி அதற்கு வடிவமும் வார்ப்பும் அளித்தன. குறிப்பாக, இந்த பரமாத்ம ஜீவாத்ம பேதாபேதங்களை விரிவாக அலசின. இவை வேறுபட்ட இரு துருவங்கள். கடவுள் வேறு ஜீவாத்மா வேறு என்ற பேத தத்துவமே உலகெங்கும் பேசப்பட்ட காலத்தில் இவை ஒன்றா (அபேத) இல்லை இரண்டா (பேத) என்னும் விசாரத்தைத் துவக்கியவை இந்த வேத உபநிஷத ரிஷி சமூகமே. முண்டக உபநிஷதம் கண்ட உருவகம் இதை அனைவருக்கும் புரியும் வடிவில் விளக்குகிறது. ஒரு மரத்தின் ஒரே கிளையில் இரண்டு பறவைகள் அமர்ந்திருந்தன. இரண்டும் மிக அழகு பொருந்தியவை. நெருங்கிய நண்பர்களும்கூட. என்று தொடங்குகிறது இந்த விளக்கம்.

இங்கு பரமனும் அவன் படைப்பும் ஒரே தன்மை கொண்டவை. அங்கு உயர்வு தாழ்வு இல்லை. இரண்டும் ஒன்றாகவே இருக்கின்றன என்னும் மகோன்னத தத்துவத்தைக் காண்கிறோம். கடவுளும் அவன் படைத்த ஜீவராசிகளும் ஒரே தன்மை வாய்ந்தவை என்பது மதங்களும் மத வழி சிந்தனையாளர்களும் ஏற்க முடியாத தத்துவம். அப்படியானால் எல்லாப் படைப்புகளுமே பரம்பொருளா? அவை அனைத்தும் அவற்றைப் படைத்தவனின் அளவற்ற செயல் திறன் கொண்டவையா? என்னும் கேள்வி பிறக்கிறது. விடை அடுத்த வரியில் அந்த உபநிஷத வாக்கியமாக வருகிறது.

*இரண்டு பறவைகளைப் பார்த்தோம் அல்லவா? இவற்றுள் ஒரு பறவை அமைதியாக எதுவும் செய்யாமல் அமர்ந்து கொண்டிருக்கிறது. மற்ற பறவை அந்த மரத்தின் பழங்களை விரும்பிச் சுவைத்துக் கொண்டிருக்கிறது. அதில் சில பழங்கள் இனிப்பானவை. சில கசப்பானவை. ஆகவே இரண்டாம் பறவை இன்பம் துன்பம் என்னும் இரு நிலைகளையும் மாறிமாறி அநுபவித்துக் கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் அந்தப் பழங்களைப் புசிப்பதில் வெறுப்படைந்து அந்தப் பறவை முதல் பறவையை நோக்குகிறது. எதுவும் செய்யாமல், பழங்களை உட்கொண்டிருக்கும் இரண்டாம் பறவையை அக்கறையுடன் முதல் பறவை பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பழங்களின் சுவையில் அதற்கு வெறுப்பு ஏற்பட்டவுடன் இரண்டாம் பறவை மற்றதுடன் சேர்கிறது. இரண்டும் பறந்து செல்கின்றன. இதன் மந்திரம் ஒரு தத்துவக் கருவூலம் என்பதால் இதன் மூலத்தைப் பார்ப்போம்*

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्य: पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभिचाकशीति ॥
समाने वृक्षे पुरुषों निमग्नोऽनाशया शोचति मुह्यमान: ।
जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोक: ॥

*சம்சார வாழ்வுக்கு அற்புத உருவகம் இது. மரம்தான் உலகம். பழங்கள் வாழ்வின் இன்ப துன்பங்கள். முதற் பறவை பரமாத்மா. இரண்டாம் பறவை ஜீவாத்மா. இதில் முக்கிய கருத்துகள் இரண்டு. ஒன்று ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியம். இரண்டும் ஒரே அழகிய உருவம் படைத்தவை; மிகவும் நட்புடையவை; ஒரே மரத்தில் வாழ்பவை. ஆனால் ஒன்று பற்று அற்ற நிலையில் உள்ளது, மற்றொன்று லௌகீகத்தில் ஆழ்ந்து தன்நிலை மறந்து வாழ்கிறது. இன்ப துன்ப இருமைகளின் பற்று நீங்கியவுடன் அது பரமாத்மாவுடன் சேர்ந்து விடுகிறது. இதுதான் அத்வைதம். இந்த முண்டகத்தின் வரிகளை வேதத்திலும் பார்க்க முடிகிறது. இக்கருத்தைதான்*

*சங்கரர் முழுமையான சித்தாந்த வடிவில் படைக்கிறார். இதில் பக்திக்கும், வேதாந்தத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காண முடிகிறது.*

*இதன் விரிவாக்கத்தை மற்ற உபநிஷதங்களிலும் காண முடிகிறது. ஈசாவாஸ்ய உபநிஷதம் அளவில் மிக சுருக்கமானது. அதில் வரும் கருத்தும் பிரம்மத்தை உணர்ந்த ஜீவனின் நிலயைத் தெளிவு படுத்தும். இதுவே முண்டகம் கண்ட இரண்டாம் பறவை. பழங்களின் சுவையில் பற்று நீங்கிய நிலையில் அது பேதங்களைக் கடக்கிறது*

***யஸ்து ஸர்வாணி பூதானி ஆத்மன்யேவானுபச்யதி ।***
***ஸர்வபூதேஷு சாத்மானம் ததோ ந விஜுகுப்ஸதே ॥ 6 ॥***

*எந்த ஜீவன் அனைத்திலும் ஆத்மாவையும், ஆத்மாவில் அனைத்தையும், காண்கிறானோ அவனே சான்றோன். அவன் விருப்பு வெறுப்புகளக் கடந்தவன். அவனிடம் பேத மனப்பான்மை அறவே அற்றுப் போகிறது. அவன் அத்யந்த சுகத்தை அடைகிறான்*

***யஸ்மின் ஸர்வானணி பூதானி ஆத்மைவாப்பூத்விஜானத: ।***
***தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வ மனுபச்யத: ॥ 7 ॥***

*அனைத்து ஜீவன்களிடத்திலும் ஒற்றுமையைக் கண்டுணர்ந்த அவனுக்கு குழப்பம் ஏது? (தத்ர கோ மோஹ:). லோகயாத்திரையில் பற்றுகளால் ஏற்படும் துக்கம் ஏது? (க: சோக:). அவன் எல்லையற்ற இன்பத்தை அடைகிறான்.*

*இந்தக் கருத்துகள் இந்தியாவில் மட்டுமல்ல மேலை நாடுகளிலும் பலரையும் ஈர்த்தது. ஷோபன்ஹேர் (Schopenhauer) உபநிஷதங்களைப் பற்றிக் கூறுகையில் உலகிலேயே மிகவும் உன்னதமானவை, மற்றும் நம்மை உயர்த்தக்கூடியவை இந்த உபநிஷத நூல்கள் ("the most profitable and elevating reading which … is possible in the world.") என்று குறிப்பிடுகிறார்*

### *ஆதிசங்கரரின் சித்தாந்தம்*

*ஆதிசங்கர பகவத் பாதர் இந்த அத்வைதம் என்னும் உயர்ந்த தத்துவத்தை உலகெங்கும் பரப்பிய மகான். அந்த தத்துவத்தின் அடிப்படையில் இறைவன் என்னும் பரமாத்மாவும், மானுடன் என்னும் ஜீவாத்மாவும் இரண்டல்ல; அவை ஒன்றே என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இது நாம் முன்பே கண்ட உபநிஷத வரிகளில் சொல்லப்பட்டிருந்தாலும் அதற்கு ஒரு முழு வடிவமும் விளக்கமும் கொடுத்த பெருமை சங்கரரையே சாரும்.*

*பிரம்ம சூத்திர பாஷ்யத்தில் அவர் சொல்லும் கருத்து அத்வைதத்தின் விளக்கமாக அமையும். பிரம்ம சத்யம், ஜகத் மித்யா, ஜீவோ பிரம்மைவ நாபர: பிரபஞ்சத்தின் அறுதி நிலை பிரம்மமே, உலகின் மற்றயவை எல்லாம் பொய்த் தோற்றங்களே. அனைத்து ஜீவன்களும் பிரம்மம் அன்றி வேறு அல்ல இதை உணர ஞான மார்க்கமே ஒரே வழி. விசாரமும் தியானமும் இதற்குத் துணை போகும். இந்த மார்க்கத்தில் பயணித்தால் மோக்ஷம் என்னும் விடுதலை கிட்டும்.*

*இதன் விளக்கமே ரமணர் எழுப்பிய “நான் யார்?” என்னும் கேள்வி. இது ஊன்றிப் பார்த்தால் இது ஒரு கேள்வி அல்ல, வேள்வி என்பது புலனாகும். ஞானப் பாதையில் சஞ்சரிப்பவர்களுக்கு பிறப்பு-இறப்பு என்னும் இருமையை அகற்றி, இந்த விசாரம் அவர்களை மோக்ஷப் பாதையில் சேர்க்கும்.*

*ஆனால் சம்சாரிகளுக்கு, இந்த உலகம் இத்தனை பிரம்மாண்டமாக இருக்கிறதே, இது பொய்யா என்னும் மயக்கம் வரும். பகவத்பாதர் கண்ட ஜகத் மித்யா என்பதுதான் தத்துவ வாழ்வின் ஆரம்பம். இது அநுபவத்தால் மட்டுமே உணரக் கூடிய ஒன்று. ‘நான் எனது என்னும் எண்ணம் எங்கு எழுகிறது என்பதை*

எண்ணிப்பார்' என்பதே ரமண பகவான் உணர்த்திய பாடம். அதுவரை அவித்யா என்னும் திரை நம்மை மறைத்து உலகம் உண்மை என்று நம்பவைக்கிறது. இது இறைவனின் ஐந்து தொழில்களில் ஒன்றான 'திரோதானம்' ஆகும். பிளாட்டோ என்னும் கிரேக்க சிந்தனையாளர் இதை 'த அலிகரி ஆப் தெ கேவ்' (The Allegory of the Cave) என்னும் உருவகத்தில் வடித்துள்ளார். இதில் ஜீவன் ஒரு பிணைக் கைதியைப் போல ஒரு குகையில் அமர்ந்து சுற்றுமுற்றும் பார்க்க முடியாமல் கட்டுண்டு கிடக்கிறான். அவனுக்கு முன்னால் ஒரு திரை. அதில் வரும் பிம்பங்களை அல்லது நிழல்களை மட்டுமே அவனால் பார்க்க இயலும். அதையே உண்மை என நம்பி அவன் அவல வாழ்வு வாழ்கிறான். இதன் விரிவாக்கம்தான் திரோதானமும், மாயையும். இது நாம் அனைவரும் பல சமயங்களில் உணரும் ஒரு அநுபவம்தான். ஆனால் அதை முழுவதும் உணர்ந்து அந்தத் திரையை விலக்கி சத்திய வடிவான பிரம்மத்தைப் பார்க்கும் சக்தி நம்மிடம் இல்லை. அதனால் அந்த மித்யையான (பொய்யான) உலகை உண்மை என நம்பி உழன்று கொண்டிருக்கிறோம்.

### பக்திவேதாந்த சித்தாந்தம்

இந்தச் சூழலில்தான் பகவத்பாதர் நம்மை உய்விக்க பக்திவேதாந்த சித்தாந்தத்தை முன்வைக்கிறார். மாயையைத் தாண்டக் கூடிய சக்தி படைத்த சிலருக்கு பூர்ண அத்வைதத்தை முன் வைக்கிறார். அதைத் தாண்ட விரும்பும், ஆனால் தாண்ட இயலாத, சாமானியர்களுக்கு பக்தி என்னும் சர்க்கரை தடவிய வேதாந்தத்தையும் உபதேசிக்கிறார்.

இந்தச் சித்தாந்தத்தை வலியுருத்தி அவர் பல கிரந்தங்களை இயற்றினார். இவற்றுள் முக்கியமானவை அவர் எழுதிய 'பாஷ்யங்கள்' எனப்படும் உரைகள். பிரம்ம சூத்திரம், உபநிஷதங்கள், பகவத் கீதை,

சநத்சுஜாதீயம் போன்ற கிரந்தங்களுக்கு அவர் இயற்றிய உரைகள் தத்துவ உலகின் கலங்கரை விளக்கமாகும். அடுத்தபடிய அவர் எழுதிய பிரகரணக்ரந்தங்கள் முக்கியமானவை. ஆத்மபோதம், விவேக சூடாமணி, போன்ற இந்த நூல்களும் அத்வைத சித்தாந்த விளக்கமாக அமைந்துள்ளன.

ஆயினும் இத்தகைய உயர்ந்த தத்துவம் சாமானிய மனிதர்களுக்கு எளிதில் புரியாத ஒன்று. ஞான மார்க்கத்தில் பிரவேசித்து முன்னேறிய சிலருக்கே அந்தத் தத்துவம் கைவசப்படும், என்பதை உணர்ந்த ஆதிசங்கரர் பல பக்தி கிரந்தங்களையும் இயற்றினார்; பல தலங்களிலும் உள்ள இறைவனைப் பாடினார். அவற்றினூடே பக்தி வேதாந்த மார்க்கத்தையும் பரப்பினார்.

இதனுடைய நோக்கம் தன்னுடைய சித்தாந்தம் ஒரு குறுகிய வட்டத்துக்குள் நின்று விடக்கூடாது; சம்சாரத்தில் நின்று அல்லறப்படும் நம்மைப் போன்ற அனைவருக்கும் ஒரு ஆரம்ப அரிச்சுவடியாக பக்தி என்னும் எளிய வழியில் கைபிடித்து அழைத்துச் சென்று, பின்னர் தத்துவம் என்னும் கடலில் முத்தெடுக்க நம்மைத் தயார் செய்ய வேண்டும் என்பதே அவருடைய உயரிய கருத்தை ஆகும். இவருடைய காலம் கிட்டத்தட்ட ஆழ்வார் நாயன்மார்கள் காலத்துடன் ஒத்துப் போவதால், இது சநாதன தர்மத்தில் பக்தி என்னும் பிரவாகத்தின் ஆரம்ப ஊற்றாகக் கொள்ளலாம். இவர் காலத்துக்கு முன் சமஸ்கிரதத்தில் பக்தி நூல்கள் புராண இதிகாச வடிவில் அமைந்திருந்தன. இவை சாமானியர்களால் அதிகம் உணரப்படாமல் இருந்தன. இதை உணர்ந்த அந்த மகான் குறைந்த எண்ணிக்கை கொண்ட சில சிறிய பக்தி நூல்களையும் நூறு சுலோகங்களைக் கொண்ட பெரிய பக்தி நூல்களையும் நமக்கு அருளிச் செய்தார்.

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. அத்வைதத்தை பரப்ப வந்த மகான் எதற்காக பக்தியை பற்றி பேச

வேண்டும் என்று. அதற்கு அந்தக் காலகட்டத்தை சற்று நோக்க வேண்டும் அவர் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டில் பாரத தேசத்தில் பலவிதமான சமயங்களும் சித்தாந்தங்களும் போட்டி போட்டுக் கொண்டு மக்களை தலை சுற்ற வைத்தன. யாகம், இஷ்டி, வேள்வி, சடங்குகள் என்று மீமாம்ச மதம் ஒரு பக்கமும், உபநிஷத்துகள் கண்ட வேதாந்த சித்தாந்தங்கள் மறு புறமும், காபாலிகம், பாசுபதம் போன்ற விபரித போதனைகள் வேறு பாதையிலும், தனித்தனியே ஆதிக்கம் செலுத்தின. இதனால் சனாதன தர்மத்தை அனுசரிக்கும் மக்கள் அதைப் பற்றிய சரியான புரிதல் இன்றிக் குழப்பம் அடைந்தனர். அவர்களின் சிலர் புத்த மதத்தையும் சமண மதத்தையும் அடைந்து அத்துடன் தங்களை ஐக்கிய படுத்திக் கொண்டார்கள். வேறு சிலர் ‘கடவுளாவது மதமாவது, வெறு போகம் தரும் இன்ப உணர்வு மட்டும் போதும்’ என்னும் இருத்தலியல் சார்ந்த சார்வாக மதத்தையும் பின்பற்றத் தொடங்கினார்கள்.

இத்தகைய குழப்பமான சூழலில் காலடியிலே அவதரித்த இந்த மகானுக்கு தன்னுடைய சித்தாந்தத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது

ஒரு பக்கம் பூர்வ மீமாம்சம், வேதாந்தம் போன்ற மதங்கள் சரியாக புரிதல் இன்றி பலவிதமாக பேசப்பட்டன இத்தகைய மதத்தை பின்பற்றியவர்களுடன் அவர் வாதம் செய்து வெற்றி பெற்றார். அத்துடன் பில்லி, சூனியம், ஏவல் போன்ற மாந்திரீக தந்திர மார்க்கங்களை பின்பற்றும் பலரோடும் அவர்கள் முறையிலேயே சென்று வாதத்தில் வெற்றி பெற்று, அவர்களை தன்னோடு இணைத்துக் கொண்டார். பௌத்த சமண அறிவாளிகள் பலரோடும் அவர் தர்க்கம் செய்து வெற்றி பெற்று தன்னுடைய அத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபனம் செய்தார். ஆனால் அதே சமயம் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை,

கூர்ஜரம் முதல் வங்காளம் வரை பரவி இருக்கும் விஸ்தாரமான இந்த தேசத்தில் வேதாந்த விசாரம் செய்பவர் வெகு சிலரே. மற்ற சாமானிய மக்களுக்கு பக்தி மார்க்கம் ஒன்றே புகல் என்பதை புரிந்து கொண்ட அந்த மகான் ஒரு சுலபமான வழியில் ஆன்மிக வாழ்வில் பயணிக்க இந்த தோத்திரங்களை அமைத்துக் கொடுத்தார் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இதைப் பற்றி புகழ் பெற்ற தத்துவ அறிஞரான முனைவர் டி. எம். பி. மஹாதேவனின் கருத்தைப் பார்ப்போம்.

> *"இந்துக்களின் சமய வாழ்க்கையில் புண்ணிய யாத்திரைத் தலங்களும் திருக்கோயில்களும் முக்கியமான இடம் வகிக்கின்றன. ... ... .. பாரத நாட்டில் இமயம் முதல் குமரி வரையிலும், காஷ்மீரத்திலிருந்து நேபாளம், அஸ்ஸாம் வரையிலும், துவாரகையிலிருந்து புரி வரையிலும் உள்ள பல்வேறு கோயில்களிலும் சங்கரர் மேற்கூறியபடி தெய்வங்களை அருள்வழிப்படுத்திய மரபான வரலாறு அந்தந்த இடங்களில் இன்றும் வழங்கி வருகிறது.[1] "*

அந்த அளவுக்கு பக்தியின் பாற்பட்டு அவரால் எழுத முடிகிறது. காரணம் அவர் பக்தி மார்க்கத்தை வேதாந்த மார்க்கத்தின் அம்சமாகவே பார்க்கிறார். இதுவே பக்தி வேதாந்தம் என்னும் சித்தாந்தத்தின் பின்புலம்.

இந்த பக்தி வேதாந்த மார்க்கத்தின் முன்னோடியாக இவரைக் கருதலாம். இந்த அடிப்படையில் அவர் எழுதிய சில நூல்களை இனி வரும் அத்தியாயங்களில் சுவைக்கலாம்.

(தொடரும்)

---

[1] டி.எம்.பி. மகாதேவன் எழுதிய சங்கரா (நேஷனல் புக் ட்ரஸ்ட்) ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு (1994).



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### திருக்கார்த்திகை மகா தீபம்

*4/12/2024 அன்று துவஜாரோஹனத்துடன் துவங்கி நடைபெற்று 13/12/2024 கார்த்திகை பிரம்மோற்சவத்தின் பத்தாம் நாளான்று அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலை 4 மணிக்கு பரணி தீபம் ஏற்றப்பட்டது.*

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் பகவான் சந்நிதியில் சிறப்பு அபிஷேக அலங்காரம் மற்றும் வேத பாராயணம் நடைபெற்றது. மாலை சரியாக 6 மணி அளவில் மலை உச்சியில் தீப தரிசனம் கண்டதும் 'அண்ணாமலைக்கு அரோகரா' என்ற கோஷத்துடன் பகவான் சந்நிதிக்கு முன்பு மலையை பார்த்த வண்ணம் தீபம் வழக்கம்போல் ஏற்றப்பட்டது. பின்னர் அருணாசல ஸ்துதி பஞ்சகம் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது.*

*கார்த்திகை தீப உற்சவத்தின் ஒருஅங்கமாக 15/12/2024 அன்று அண்ணாமலையார் கிரிபிரதக்ஷிணம் செய்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.*

*அண்ணாமலையாரை எதிர்நோக்கி அன்பர்கள் சாலை நெடுகிலும் திரண்டிருந்தனர். ஆச்ரமம் சார்பில் சுவாமிக்கு வஸ்திரங்கள் சாற்றப்பட்டு சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது.*

## 145 ஆவது ரமண ஜயந்தி

*பகவான் ரமண மகரிஷிகளின் 145 ஆவது ஜயந்தி விழா 17/12/2024 அன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.*

*அதிகாலை முதலே தனுர் மாத பாராயணம், ஜயந்தி தின சிறப்புப் பாராயணம், மஹன்யாச ருத்ரஜபம், விமரிசையான அபிஷேகங்கள் மற்றும் பல வண்ண மலர்களால் அலங்காரங்கள் முதலியன நடைபெற்றன.*

*பூமாலைகளாலும் பாமாலைகளாலும் அன்பர்கள் தங்கள் குருவான அருணாசல ரமணனை வழிபட்டனர். இறுதியாக ஆரத்தி நடைபெற்றது. இவ்வாறாக 145 ஆவது ரமண ஜயந்தி வைபவம் சிறப்பாக நடந்தேறியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ரமண மகரிஷிகளின் அருளைப் பெற்றனர். கலந்து கொண்ட அன்பர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் சிறப்பு உணவு விருந்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.*

## 145 ஆவது ஸ்ரீ ரமண ஜயந்தி கொண்டாட்டங்கள்

## ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை

**அனந்தசாமி ஞானமண்டபம் 41, அலமேலு மங்காபுரம்**

**திருமயிலை சென்னை 600004**

*17/12/2024 அன்று காலை 7 மணிமுதல் மதியம் 11:30 வரை லக்ஷார்ச்சனை மற்றும் ரமண பாத பூஜையுடன் துவங்கிய விழா மதியம் சிறப்பு விருந்துடன் சிறப்பாக நடந்தேறியது. இரவு அக்ஷரமணமாலை பாராயணத்துடன் மயிலை மாடவீதிகளில் ரமண திருவுருவம் தாங்கிய ரதம் வீதி உலா நடைபெற்றது. திரளான அன்பர்கள் கலந்து கொண்டனர்.*

*டிசம்பர் 22 ஞாயிறன்று மார்கழி பாராயணம் நடைபெற்றது. காலை 8:30 மணி முதல் நண்பகல் 12:30 வரை நடைபெற்ற இவ்விழாவில், திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி மற்றும் ரமண பல்லாண்டு பாராயணம் செய்யப்பட்டது. அனைவர்க்கும் காலை மற்றும் மதியம் உணவு பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

### (ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு பாத்தியப்பட்டது)

*17/12/2024 காலை 9 மணி முதல் மதியம் 11:30 வரை வேதபாராயணம், ஸ்ரீ ரமண அஷ்டோத்ர பூஜை, மற்றும் ஸ்ரீரமணர் பாடல்கள் பாடப்பெற்று பிரசாதம் வழங்கப்பட்டது.*

*மழைகாரணமாக, இதன் முக்கிய கொண்டாட்டங்கள் 5 ஜனவரி 2025 காலை 7 மணி முதல் மதியம் வரை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.*

## ஸ்ரீ ரமண சத்சங்கம், நங்கைநல்லூர்

*17 டிசம்பர் 2024 காலை 6:30 மணி முதல் காலை 9:00 மணிவரை வேதபாராயணம், சஹஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்றது. பின்னர் திருமதி. அமிர்தலக்ஷ்மி அவர்கள் பகவான் பாடல்களைப் பாடினார். ஆரத்திக்குப் பின்னர் பிரசாதம் வழங்கப்பட்டது. மாலை 5:00 மணிக்கு அக்ஷரமணமாலை பாராயணத்திற்குப் பின்னர் திரு. குமார் ராஜா, (பதிப்பாளர், ரமணோதயம், ரமண கேந்திரா டிரஸ்ட்) அவர்கள் ரமண மகரிஷிகளைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார். ஆரத்திக்குப் பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*17/12/2024 காலை 10 மணி முதல் மதியம் 12 வரை பூஜை, அக்ஷரமணமாலை மற்றும் சந்நிதிமுறை பாடல்கள் பாராயணம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்கள் சொற்பொழிவுக்குப் பின்னர் தீபாராதனை நடைபெற்றது. கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் மதிய உணவுப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## சூளைமேடு, சென்னை

*17/12/2024 அதிகாலை 4.00 மணிமுதல் மதியம் 1 மணிவரை ஸ்ரீரமண ஜயந்தி கொண்டாடப்பட்டது. வேதபாராயணம், மஹன்யாச ருத்ர பூஜைகள் நடைபெற்றன. ரமண சந்நிதிமுறை பாடல்கள் பக்தவாத்யங்களுடன் பண்ணிசையாக சிவத்திரு. பா. சத்குருநாத தேசிக ஓதுவார் அவர்கள் இசைத்தார்கள். அக்ஷரமணமாலை பாராயணம், அர்ச்சனை, தீபாராதனைக்குப் பிறகு அனைவருக்கும் மதிய உணவு பிரசாதம் வழங்கப்பட்டது.*

## அம்பாசமுத்திரம், ஊர்க்காடு

*22/12/2024 அன்று திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே உள்ள ஊர்க்காடு கிராமத்தில் வசிக்கும் ரமண பக்தரான திரு. ரமேஷ் அவர்களின் இல்லத்தில் ஸ்ரீ ரமண ஜயந்தி விழா மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. அம்பாசமுத்திரம் ஸ்ரீ லெக்ஷ்மி நாராயண ராஜா அவர்களின் துவக்க உரை, அன்பர்களின் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் வி.கே.புரம் திருச்சிற்றம்பலம் குழுவினரின் திருவாசக முற்றோதல், பள்ளக்கால் கைவல்ய ஆஸ்ரம அன்பர்களின் சொற்பொழிவு மற்றும் பாராயணம் நடைபெற்றன. கலந்து கொண்ட அனைத்து அன்பர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ ரமண மந்திரம், பழனி

*30/12/2024 திங்கட்கிழமையன்று ஸ்ரீ ரமண இல்லம், சண்முகபுரம், பழனியில் மாலை 06:00 மணிக்கு ரமண ஜயந்தி விழா துவங்கி, தலைவர் ந. சோமசுந்தரம் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மந்திரத்தின் பொறுப்பானவர்கள் அனைவரின் பங்களிப்புடன் நடைபெற்ற விழாவில் ஸ்ரீரங்கம் ரமணசுந்தர ராஜன் சிறப்புரை ஆற்றினார். மறுநாள் காலை ஆதரவு அற்ற மக்களுக்கு சிற்றுண்டி பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ முருகனார் மந்திரம், ராமநாதபுரம்

*காலை 10 மணி முதல் மதியம் 12 வரை பூஜை, அக்ஷரமணமாலை மற்றும் சந்நிதிமுறை பாடல்கள் பாராயணம் நடைபெற்றது. திரு சுப்பராஜ் மற்றும் Dr சந்தர சேகர்*

*ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவுக்குப் பின்னர் தீபாராதனை நடைபெற்றது. கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் மதிய உணவுப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## பூண்டி ஸ்ரீ ரமணாலயம்

*5/1/2025 ஞாயிறன்று காலை 10:00 மணிக்கு அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. அனைவருக்கும் மதிய உணவுப் பிரசாதம் அளிக்கப்பட்டது.*

## கோட்டூர் மலையாண்டிப் பட்டினம், பொள்ளாச்சி

### அக்ஷரமணமாலை சேவை மையம்

*ஆசிரியர் பாலு அவர்கள் இல்லத்தில் 15/12/2024 ஞாயிறன்று ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 145 ஆவது ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது. அருணாசல ஸ்துதி பஞ்சகம் பாராயணத்திற்குப் பிறகு தீபாராதனை நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் உணவுப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

### ஸ்ரீ ரமண மையம் சேலம்

*29/12/2024 மாலை 2:30 முதல் ரமண அஷ்டோத்ரம், அக்ஷரமணமாலை பாராயணம். பத்திரிக்கையாளர் திரு. கிருஷ்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




அருணாசலேஸ்வரர் கிரிப்பிரதக்ஷிணம் 15-12-2024




145 ஆவது ஸ்ரீ ரமண ஜயந்தி – ஸ்ரீ ரமணாஸ்ரமம்




சுவாமி ரமணானந்தா ஆராதனை 18-12-2024

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

